# இஸ்லாத்தில் சிறுவர் உளவியல்



ஏபீயெம் இத்ரீஸ் (நளீமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sainudeen. S. Fareed.
98/11/11

# இஸ்லாத்தில் சிறுவர் உளவியல்

பாகம் - 01

## குழந்தைப் பருவம்

மூலம்
எம்.எம். இத்ரீஸ் (நளீமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| TITLE | : | ISLATHTHIL SIRUWAR ULAVIYAL (Tamil) |
| AUTHOR | : | ASH-SHIEKH A.B.M. IDREES (Naleemi) |
| PUBLISHERS | : | JAMI-UL - AZHAR<br>JUMMA MOSQUE,<br>THALGASPITIYA,<br>SHRI LANKA. |
| FIRST IMPRESSION | : | 2000 COPIES (October 1998) |
| COVER DESIGN | : | M. SIRAJ |
| TYPESETTING | : | M. R. M. ASLAM |
| PAGES | : | 25 |
| PRICE | : | Rs. 30/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


- முன்னுரை
- வாழ்த்தும் வரவேற்பும்
- குழந்தைப் பருவம்
  - தொட்டில் பருவம்
  - பால் குடிப் பருவம்
  - தசை இயக்கப்பருவம்
    - * உடல் வளர்ச்சி
    - * புலனுணர்வு வளர்ச்சி
    - * பாலுணர்வு வளர்ச்சி
    - * அறிவு வளர்ச்சி
      - – அல்லாஹ்வை நம்புதல்
      - – அல் – குர்ஆனைக் கற்றல்
      - – அல்லாஹ்வின் தூதரை நம்புதல
    - * கற்பனை வளர்ச்சி
    - * மனவெழுச்சி வளர்ச்சி
    - * சமூக வளர்ச்சி
    - * ஒழுக்க வளர்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

هذه الأفكار مهداة إلى أخي الكريم

محمد محمد صالح الكوری

الذي أنفق في بناء المسجد الأزهر بتلفسبتى

وطبع هذا الكتاب فى أسرع وقت ممكن

وأطال الله عمره وأمدّه فى خدمة الاسلام

كما نرجو التكرّم باستمرار هذه الصلة

الإيمانية الوثيقة عن طريق تزويدنا

بأعمال خيرية.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவியல் பற்றி உங்களுடன்....

உளவியல் துறை நமது நினைவிலிருந்து சிகமன் பிரய்டும் அவரது சகபாடிகளுமே நினைவுக்கு வரும். ஆனால் இஸ்லாத்தில் உளவியல் ஆய்வுக்கு நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. துரதிஷ்டவசமாக சில வரலாற்றுக் காரணங்களாலும் திட்டமிட்ட மூடி மறைப்புக்களாலும் அவை போற்றி வளர்க்கப்படவில்லை.

ஒரு முறை இறைத்தூதர் 'ஆயிஷா நீ விருப்புடன் இருக்கிறாயா அல்லது வெறுப்புடன் இருக்கிறாயா என்பது எனக்குத் தெரியும்' என்று கூற 'அதெப்படித்தெரியும்' என்று ஆயிஷா(றழி) கேட்டார். 'நீ முஹம்மதின் இரட்சகன் மீது' அல்லது 'இப்றாஹீமின் இரட்சகன் மீது' என்று சத்தியம் செய்யும் போது நான் அதைப் பரிந்து கொள்வேன்' என்றார் அவர். (ஆதாரம் : புஹாரி)

பள்ளியில் வைத்து இறைத்தூதர் ஒரு பெண்ணுடன் பெசிக் கொண்டிருப்பதை சில நபித்தோழர்கள் கண்டுவிட்டனர். உடனே இறைத்தூதர் அவர்களிடம் விரைந்து சென்று 'நான் ஸபிய்யாவுடன்தான் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருகிறேன்' என்று கூற 'இறைதூதரே நாம் உங்களை நல்ல கண்ணோட்டத்திலல்லாமல் பார்ப்போமா?' என்று திருப்பிக் கேட்டனர். அதற்கு நபிகளார் மனித உடலில் குருதி பாயும் இடங்களிலெல்லாம் ஷைத்தானும் ஓடிக்கொண்டிருக்கிறான். அவன் உங்கள் உள்ளத்தில் தீய எண்ணத்தை ஏற்படுத்திவடுவான் என்றுதான் பயந்தேன்.' என்றார். (ஆதாரம் : புஹாரி)

இறைதூதரின் உளவியல் கண்ணோட்டம் எவ்வாறிருந்தது என்பதற்கு இவ்விரு ஹதீஸ்களே ஒருவருக்குப் போதும்.

உஹத் யுத்தத்தில் தோற்ற முஸ்லிம்களின் தோல்வி மனப்பான்மையை நீக்க மறுநாள் மீண்டும் முஸ்லிம்களை யுத்தத்துக்குத் தயார்படுத்தி காபிர்களை விரட்டிச் சென்று மீண்ட சம்பவமும் கஸ்வதுல் மிரசயில் வைத்து எழுந்த முஹாஜிர் அன்ஸார் சர்ச்சையை மறக்க வைக்க திடீரெனப் பயணிக்க வைத்து எல்லோரும் எதுவும் பேசாது உறங்கிய நிகழ்ச்சியும் இறைதூதரின் உளவியல் ரீதியான அணுகுமுறைகளுக்கு வரலாற்றில் அழிக்க முடியாத சான்றுகளாகும்.

இஸ்லாத்தின் இந்த மனோதத்துவப் பகுதியைத் 'தனியாக ஆராய்ந்தவர்களில் இமாம் இப்னுள் கையிம், இமாம் கஸ்ஸாலி போன்றோர் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். வலாயிபுல் குலூப் - உள்ளத்தின் தொழிற்பாடுகள், முஹ்லிக்காத்துன் நப்ஸ் - ஆன்மாவை அழிப்பவை என்ற தலைப்பிலான இவர்களது ஆய்வுகள் இன்றும் பேசப்படுகின்றன.

இந்த நூற்றாண்டின் முதற் காற்கூறின் இறுதியில் எழுந்த மாபெரும் இஸ்லாமிய எழுச்சியலை இஸ்லாத்தின் எல்லாத் துறைகளையும் தொட்டு தழுவிச் சென்றது. இதே நேரத்தில் மேற்குலகின் நவீன சிந்தனைகளைக் கற்றவர்களும் இஸ்லாமிய அணிகளோடு இணைந்து போராட வந்தனர். இவர்கள் முற்றிலும் மேற்குலகுக்கு அடிமையானவர்களைப் போன்றோ அல்லது மேற்குலகின் சிந்தனை கலாசாரப் படையெடுப்புக்குப் பயந்து 'பாரம்பரியத்துக்குள்' ஓடி ஒழிந்தவர்களைப் போன்றோ இருக்கவில்லை. மேற்குலகின் சிந்தனைகள் நவீன மனிதனை வாழவைக்க எந்த வகையிலும் பொருத்தமற்றவை. இஸ்லாம் ஒன்றே தீர்வுக்கு வழி என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களே இவர்கள். எனவே இஸ்லாத்தின் எல்லாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளையும் போல உளவியல் துறையும் புத்துயிர் பெறத் தொடங்கியது. முன்னை நாள் ராபிதாவின் தலைவர் மர்ஹூம் கலாநிதி அப்துல்லாஹ் நாஸிஹ் உல்வான் 'தர்பிய்யத்துல் அவ்லாத் பில் இஸ்லாம் '(இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு) என்னும் பெயரில் மிக உன்னத படைப்பைத் தந்தார். முப்பெரும் பாகங்களைக் கொண்ட இந்நூல் ஒவ்வொரு முஸ்லிமின் வீட்டு நூலகத்திலும் வைத்துப் பாதுகாக்க வேண்டியது. அடுத்து பேராசிரியர் முஹம்மத் குத்ப் எழுதிய 'மன்ஹஜித் தர்பிய்யத்தில் இஸ்லாமிய்யா' (இஸ்லாமிய உளவியல் கோட்பாடு) என்ற நூலும் இன்று குறிப்பிடத்தக்கது. கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அஷ்ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி, பொராசிரியர் பத்ஹு யகுன் , கலாநிதி வஜீஹ் ஸைனுல் ஆபிதீன், கலாநிதி அஹ்மத் புவாத் அல் அஹ்வானி, முனீர் கழ்பான், அறிஞர் அன்வர் அல் ஜின்தி, அமீனுல் மிஸ்ர், மஹம்மத் ஷதீத் போன்றோர் இத்துறையில் பங்களிப்புச் செய்த இக்கால இஸ்லாமிய அறிஞர்களாகும்.

ஆனால் இவர்களின் எந்தப் படைப்பும் இன்னும் தமிழ் உலகுக்கு வந்து சேரவில்லை. தமிழ் உலகின் முஸ்லிம் எழுத்தாளர்கள் தாம்பத்திய வாழ்வு பற்றி நூல்கள் எழுதுவதோடு தமது பணியை முடித்துக் கொள்கின்றனர். தொடர்பூடகத் துறையால் ஏற்பட்ட அபார முன்னேற்றம் பூகோளக்கிராமமாக இருந்த உலகத்தை பூகோள அறையாக மாற்றியமைத்தமை பெற்றோரும் பிள்ளைகளும் அறைக்குள்ளிருந்தபடியே இன்டநெட்டின் புதிய உளவியற் பாதிப்புக்குள்ளாகி வருகின்ற நேரத்தில் நாம் மிகுந்து சிந்தித்து செயற்பட வேண்டியவர்களாயுள்ளோம். இஸ்லாமியமயப்படுத்தலுக்கான எந்த முயற்சியும் இல்லாததால் இஸ்லாத்தின் அடிக்கட்டுமான குடும்பம் என்ற நிறுவனம் ஆட்டங்கண்டு வருகின்றது. தலாக்கின் புள்ளிவிபரம் தலைக்கு மேல் அதிகரித்துச் செல்கின்றது. இந்த இடத்தில் தாயாகவும் தந்தையாகவும் மாறியவர்களும் மாற இருப்பவர்களும் திருமணத்தின் ஒரு முன்னிபந்தனையாக இஸ்லாத்தின் உளவியலை ஆழ்ந்து புரிந்துகொள்வது அவசியமாகின்றது. சரியான புரிதல் இருந்தால்தான் அடுத்த நூற்றாண்டிலாவது முழுமையான இஸ்லாமிய ஆளுமை படைத்த மனிதர்களை இந்த நாட்டில் காணலாம்.

இந்நூலின் ஆசிரியர் உளவியல் நிபுணரோ அத்துறையில் பட்டம் பெற்றவரோ அல்ல. மாறாக மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் முக்கிய படைப்புக்களைப் பார்த்தவர் மாத்திரமே. பழைய புதிய இஸ்லாமிய அறிஞர்களின் உளவியல் கருத்துக்களே இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இதற்கு பேராசிரியர் அப்துர் ரஊித் அல் அத்தார் என்பாரின் உளவியல் கட்டுரைகளின் தலைப்புக்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. குழந்தைப் பருவத்தை மட்டுமே இந்நூல் விளக்குகின்றது. அடுத்த பருவங்களான பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம் என்பன இன்ஷா அல்லாஹ் வெளிவரும் இஸ்லாமிய உளவியலை விளக்க இது ஒன்று போதாது. இன்னும் பல வெளிவர வேண்டும். இந்நூலை மிக அவசரமாக வெளிக்கொணர்வதில் உதவிய சகோதரர் முஹம்மத் முஹம்மத் ஸாலிஹ் அல் கூறி அவர்களுக்கும் ஒத்துழைத்த அனைத்து சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்.

மஹ்மூத் ஆலிம் வீதி
வாழைச்சேனை - 5
1998 - 10 - 30

அன்புடன்
உங்கள் சகோதரன்
ஏபியெம் இத்ரீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தும் வரவேற்பும்

'செல்வமும் பிள்ளைகளும் உலக வாழ்வின் அலங்காரங்களாகும்.'

(அல் கஹ்ப் 46)

அல்குர்ஆனின் கருத்துப்படி, குழந்தைகள் வாழ்க்கையின் வரப்பிரசாதம். அவர்களால்தான் வாழ்வே அழகு பெறுகின்றது. அவர்களால்தான் வாழ்க்கைக்கே ஒரு வசீகரம் கிடைக்கிறது. எத்தனை கோடி செல்வமிருந்தாலும் ஓடி விளையாட ஒரு குழந்தை இல்லாவிட்டால் வேதனையால் வாழ்வே வாடி வதங்கிவிடுமல்லவா?!

செல்வத்தால் சில தேவைகள் நிறைவேறலாம். ஆனால் எல்லாத் தேவைகளும் செல்வத்தால் நிறைவேறுவதில்லை. செல்வத்தை அடுத்துத்தான் அல் குர்ஆன் இங்கே பிள்ளைகளைக் கூறியுள்ளது. காரணம் பிள்ளைகளும் ஒரு செல்வம். களஞ்சியத்தில்தான் செல்வமிருக்கும். செல்வத்தைப் பெறவேண்டுமானால் களஞ்சியத்துக்குச் செல்ல வேண்டும். ஆனால் இங்கு பிள்ளையே ஒரு செல்வக் களஞ்சியம்தான்.

அது வெறும் செல்வமல்ல. பெரும் செல்வம். அதாவது பெற்றெடுக்கும் செல்வம். அது பூட்டி வைக்கும் செல்வமல்ல. ஊட்டி வளர்க்கும் செல்வம். எம்மைக் களிப்பூட்டி எமது தனிமையைப் போக்கி எமது வாழ்வையே அழகுபடுத்துபவர்கள் குழந்தைகள்தான். எனவே எமது வாழ்வே அலங்கரிக்க வந்த குழந்தைகளை இஸ்லாமிய ரீதியாக எப்படி வரவேற்பது என்பதையே இப்போது நோக்கப் போகிறோம். தாயின் வயிற்றிலிருந்து இந்தப் பூமிக்கு வரும் குழந்தை இறைவனின் ஆன்மாவைச் சுமந்துகொண்டு வருகின்றது. இதனை அழகிய முறையில் வரவேற்பதே இஸ்லாமியப் பண்பாடாகும்.

# குழந்தைப் பருவம்

பிள்ளை வளர்ச்சியின் முதற் பருவம், குழந்தைப் பருவமாகும். இது குழந்தை பிறந்ததிலிருந்து ஐந்து வருடங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இப்பருவத்தையும். உளவியலாளர் மூன்று கட்டங்களாகப் வகுத்துள்ளனர்.

# தொட்டில் பருவம்

இது குழந்தை பிறந்து இரு வாரங்கள் வரையுள்ள காலப்பகுதியைக் குறிக்கின்றது. இதுதான் குழந்தையை வாழ்த்தி வரவேற்கும் பருவமாகும். இப்பருவத்தில் செய்ய வேண்டிய இஸ்லாமியப் பண்பாட்டு முறைகளையே ஒவ்வொன்றாக நோக்கப் போகின்றோம்.

**குழந்தை பிறந்த செய்தியை அறிவித்தல்**

இதை இறைவன் எப்படி அறிவிக்கின்றான் என்பதைப் பாருங்கள்

'ஸகரிய்யா! நாம் உமக்கு 'யஹ்யா' என்னும் பெயருடைய குழந்தை பிறப்பதைப் பற்றி நன்மாராயம் கூறுகின்றோம்.' (மர்யம் 7)

அல்லாஹ் வழிபடும் அடியானின் வருகை குறித்து மகிழ்ச்சியடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதே இந்த நன்மாராயத்தின் நோக்கமாகும். மேலும் குழந்தை வீட்டினதும், சுற்றத்தாரினதும் அன்பான அரவனைப்பில் ஆரோக்கியமாக வளருவதற்கும் அது வழிவகுக்கும்.

**இனிப்பூட்டல்**

பேரீத்தம் பழத்தை நன்கு மென்று அதனைக் குழந்தைக்கு ஊட்டுவதையே இது குறிக்கின்றது. இந்த அழகிய வழிமுறையை இறைதூதரே தனது தோழர்களின் குழந்தைகளுக்கு செய்து காட்டியுள்ளார்கள்.

'அனஸ் பின் மாலிக் பின்வருமாறு அறிவிக்கின்றார். எனக்கொரு குழந்தை பிறந்தது. அபூதல்ஹா அதனை இறைதூதரிடம். எடுத்துச் செல்லுமாறு பணித்தார். நான் நபிகளாரிடம். குழந்தையைக் கொண்டுவந்தேன். குழந்தையுடன் சேர்த்து பேரீச்சம் பழங்களையும் அவர் அனுப்பியிருந்தார். இறை தூதர் அதை எடுத்து வாயில் வைத்து மென்றுவிட்டு குழந்தையின் வாயில் வைத்தார். அப்துல்லாஹ் என்றும் அக்குழந்தைக்குப் பெயரும் வைத்தார். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

குழந்தையின் இரைப்பையை சென்றடையும் முதலாவது குளுக்கோஸ் உணவு இதுவாகும். இது சமிபாட்டுக்கு ஏதுவாக அமைவதால் குழந்தை எளிதாக தாய்ப்பாலை அருந்துவதற்கும் வழிவகுக்கின்றது.

குழந்தை பிறந்த முதலாவது நாள் இனிப்பூட்டிய இறைத் தூதர் அதன் ஏழாம் நாள் விருத்த சேதனம் செய்யுமாறு ஏவியிருப்பதும் சிந்தனைக்குரிய விடயமாகும்.

குழந்தை பிறந்ததைத் தொடர்ந்து அதன் வாயில் இனிப்புப் பதார்த்தத்தை வைப்பதன் மூலம் ஊசி மருந்தேற்றுவதாலோ அல்லது விருத்த சேதனம் செய்வதாலோ ஏற்படும் வலியை பொயளவில் குறைக்க முடியுமென அண்மையில்தான் மருத்துவ உலகம்* கண்டுபிடித்தது.

**அழகிய பெயர் சூட்டல்**

இதுபற்றி இறைத் தூதர் பின்வருமாறு கூறியுள்ளார். 'நீங்கள் மறுமை நாளில் உங்களுடைய தந்தைகளின் பெயரைக் கொண்டே அழைக்கப்படுவீர்கள். எனவே சிறந்த பெயர்களைச் சூட்டிக் கொள்ளுங்கள்' (ஆதாரம் : முஸ்லிம்)

குழந்தையின் ஆளுமையைப் பாதுகாப்பதில் அதற்கு சூட்டும் பெயருக்கு ஒரு பங்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை. பெயருக்கேற்ற குழந்தையாக அது

* இங்கிலாந்தின் வடபகுதியான டுநனள நகரில் அமைந்துள்ள பல்கலைக்கழக மருத்துவ மனையில் ஆங்கிலேய மருத்துவர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்கள் அடங்கிய குழுவொன்று புதிதாகப் பிறந்த குழந்தையின் அழுகையை நிறுத்தவும் ஊசியேற்றும் போது ஏற்படும் வலியைக் குறைக்கவும் வித்தியாசமான அளவுகளில் இனிப்புப் பதார்த்தங்களை குழந்தைக்குக் கொடுத்து அதன் தாக்கத்தைக் கண்டறிய பரிசோதனையை மேற்கொண்டது. மேற்படி ஆய்வு முடிவுகளை 1995 / 6 / 10 ஆந் திகதி British Medical Gournal வெளியிட்டது. 37 - 42 வாசகங்கள் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த நல்ல ஆரோக்கியமான 60 குழந்தைகள் மீதே மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட மருத்துவ மனையில் பிறந்த இக்குழந்தைகளில் 30 பேருக்கு எதுவும் கலக்காத வெறும் நீர் புகட்டப்பட்டது. எஞ்சிய 30 குழந்தைகளும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அதில் முதல் குழுவுக்கு 12.5% உம் இரண்டாவது குழுவுக்கு 25% உம் மூன்றாவது குழுவுக்கு 50% உம் இனிப்புப் பதார்த்தம் புகட்டப்பட்டது. அடுத்த இரு நிமிடங்களில் எல்லாக் குழந்தைகளின் உடலிலும் ஊசிகள் ஏற்றப்பட்டன. ஊசி ஏற்றப்பட்டு மூன்று நிமிடங்களில் பின்வரும் முடிவுகள் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்வதற்கும் அது வழிவகுக்கும். இறைத் தூதர் தோழர்களில் சிலருக்கிருந்த பொருத்தமற்ற பெயர்களை வைத்த நபித் தோழர்களின் குழந்தைகளுக்கு அழகிய பெயர் சூட்டியதும் குறிப்பிடத்தக்கது.

**அகீகா கொடுத்தல்**

குழந்தை பிறந்து ஏழாம் நாள் ஆண் குழந்தைக்கு இரு ஆடுகளும் பெண் குழந்தைக்கு ஒரு ஆடும் அறுத்துக் கொடுக்க வேண்டும். இக்கருத்தை பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

'ஒவ்வொரு குழந்தையும் அதன் அகீகாவைக் கொண்டே பொருப்பேற்கப்படுகின்றது. இது குழந்தை பிறந்து ஏழாம் நாள் அறுத்துக் கொடுக்கப்படும். அந்நாளில் குழந்தைக்குப் பெயர் சூட்டப்படும். அதன் தலைமுடியும் அப்போது இறக்கப்படும். (ஆதாரம் : அஸ்ஹாபுஸ்ஸுனன் )

அல்லாஹ்வுடைய கட்டளைக்கு மனிதன் கட்டுப்பட வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. குர்பானி அல்லாஹ்விடம் அடியானை நெறுங்கச் செய்யும் நற்செயலாகும். மனிதனது ஆயுளை அதிகரிப்பதற்கும் அது வழியாக அமையும். துன்பங்கள் சோதனைகளைவிட்டு அல்லாஹ் குழந்தையைப் பாதுகாப்பதற்கு குழந்தை கொடுக்கும் பித்யாவாகும்.

**தலைமுடியகற்றல்**

இதனையும் குழந்தை பிறந்து ஏழாம் நாளிலேயே செய்ய வேண்டும். பாத்திமா (றழி) அவர்களைப் பார்த்து இறைதூதர் கூறும்போது

'பாத்திமா! குழந்தையின் முடியை அகற்றி அந்த முடியின் நிறைக்கு வெள்ளியை தர்மம் செய்வீராக! ' (ஆதாரம்: அஹ்மத், திர்மிதீ)

தலைமுடி ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வளரும் என்பதற்காகவே இங்கு குழந்தையின் தலைமுடி அது பிறந்து ஏழாம் நாள் அகற்றப்படுகிறது. இதைப்பற்றி இமாம் இப்னு கையும் விளக்கும் போது

'குழந்தையின் தலைமுடியை அகற்றுவதன் மூலம் அதன் பிறகு பலமும் உறுதியும் வாய்ந்த முடிகள் முளைப்பதற்கு ஏதுவாக அமையும். குழந்தையின் தலைப்பாரத்தைக் குறைப்பதாகவும் அது அமையும். தலைமுடி அகற்றப்படுவதால் மயிர்த்துளையூடாக இலகுவில் வியர்வை வெளியேற வாய்ப்புண்டு. இதில் குழந்தையின் பார்வை, கேள்வி, நுகரும் ஆற்றல்கள் வளர்ச்சியடையும்.

அகற்றப்பட்ட முடியின் நிறைக்கு சமமாக வெள்ளியைத் தர்மம் செய்வதும் இறை தூதரின் பண்பாடாகும். அது சமூகக் கூட்டுப் பொறுப்பை வளர்க்கவும் உதவுகின்றது.

---

இனிப்புப் பதார்த்தம் கொடுக்கப்பட்ட குழந்தைகளின் வலி குறைந்திருந்ததோடு இதயத் துடிப்பின் அதிகரிப்பும் குறைந்து காணப்பட்டது.

50% இனிப்பு கொடுக்கப்பட்ட குழந்தைகள் மிகவும் நல்ல நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. இனிப்புப் பதார்த்தத்தின் அளவு அதிகரிக்க அழுகையும் வலியும் வேகமான இதயத் துடிப்பும் படிப்படியாகக் குறைந்து கொண்டு வருவது அவதானிக்கப்பட்டது.

தகவல் : அல் முஜ்தமாஃ இதழ் 1160 ஆண்டு 1995 /08 /01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருத்த சேதனம்**

இதைப்பற்றி இறைதூதர் பின்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள் :

'பின்வரும் ஐந்து விடயங்கள் மனிதன் படைக்கப்பட்டதன் இயற்கைத் தன்மையோடு தொடர்பானதாகும். விருத்த சேதனம் செய்தல், பிறப்புருப்பின் முடியகற்றல், நகம் வெட்டுதல் ,கமுக்கட்டு முடியை அகற்றுதல், மீசையைக் கத்தரித்தல்.'

(ஆதாரம் : புஹாரி , முஸ்லிம்)

ஹஸன், ஹுஸைன் (றழி) அவர்களிருவரும் பிறந்து ஏழாம் நாள் இறைத் தூதர் விருத்த சேதனம் செய்ததாக அறிவிப்புக்கள் வந்துள்ளன. புற்றுநோய், சிறுநீர்க் கோளாறு போன்ற நோய்கள் வராமல் பாதுகாக்கவும் உடல் ஆரோக்கியத்தைப் பேணவும் விருத்த சேதனம் உதவுகின்றது. இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்த பண்பாடாகவும் இது இருக்கிறது.

## பால்குடிப் பருவம்

குழந்தை பிறந்ததிலிருந்து இரண்டு வருடங்களை உள்ளடக்கியதே பால்குடிப் பருவமாகும். அதுபற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

'பாலூட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்பினால் தாய்மார் தமது குழந்தைகளுக்கு அவை பிறந்ததிலிருந்து இரண்டு வருடங்கள் முழுமையாகப் பாலூட்டட்டும்.

(அல் பகரா 233)

உளவியலாளரின் கருத்துப்படி பாலூட்டல் செயல்பாடு வெறுமனே ஒரு உடலியல் தேவையை நிறைவு செய்வது மாத்திரமல்ல. உடல், உள்ளம், உனர்வு, மனவெழுச்சி, ஒழுக்கம், சமூகவியல் ஆகிய அனைத்துப் பகுதிகளையும் பூரணமாகக் கொண்ட செயற்பாடாகும். பாலின் வகை, பாலூட்டும் தாயின் பண்புகள் குழந்தையின் ஆளுமையில் தாக்கத்தை விளைவிக்கின்றது. எனவே தான் இறைத்தூதர் முட்டாள் பெண் பாலூட்டுவதை தடைசெய்தார்.

'பாலூட்டுவதற்காக முட்டாள் பெண்களை அமர்த்த வேண்டாம். ஏனெனில் பால் பாரம்பரியப் பண்புகளை கடத்தக் கூடியதாகும்.'

குழந்தையின் ஆளுமையில் தாய்ப்பாலுக்கு ஒரு தாக்கமுண்டு. இஸ்லாமிய அறிஞர்கள் போல் மேற்கத்திய அறிஞர்களும் இதை ஒப்புக்கொள்கின்றனர். எனவே குழந்தைக்குப் பாலூட்டும் தாய்க்கு இருக்க வேண்டிய பண்புகளை வரையறை செய்துள்ளனர். இந்த வரையறை தொடர்பாக இமாம் கஸ்ஸாலி கூறும் போது,

'சிறந்த மார்க்கப்பற்றுள்ள ஹலாலானதைச் சாப்பிடக்கூடிய பெண்ணையே குழந்தைக்குப் பாலூட்ட நியமிக்க வேண்டும். ஏனெனில் ஹராமான உணவில் உருவான பாலில் பரகத் இருக்காது. இவ்வாறான பாலூட்டலில் குழந்தை வளருமானால் அதன் இயல்பு இழிகுணங்களின் பக்கமே சார்ந்திருக்கும்.'

இதுபற்றி ஜோன் ஜெக்ரோஸோ என்ற அறிஞர் கூறும் போது,

'பாலூட்டும் தாய் ஆரோக்கியமானவளாகவும் அழகிய பண்புடையவளாகவும், சாந்தமானவளாகவும் இருப்பது அவசியமாகும். ஏனெனில் கடுமையும் அதிக உணர்ச்சி வசப்படுவதும், ஆரோக்கியக் குறைவும், பாலின் இயல்பை குறைத்துவிடக் கூடியவை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் மெக்டோகல் கூறும் போது,

'இன்றைய சமூகம் புட்டிப் பாலின் அடிப்படையில் வளர்ந்துள்ளதை நான் காண்கிறேன். எனவே வன்முறையும், விரக்தியும் உறவுகளில் பூசலும் ஜீவகாருண்யமின்மையும் தனிமனிதர்களிடம் வெளிப்படவே செய்யும். குழந்தை பால்குடிக்கும் போத்தலை சட்டரீதியாக சமூகம் தடை செய்யும் போதுதான் இப்பிரச்சினைகள் தீரும்.'

தாய்ப்பாலின் அவசியத்தை வலியுறுத்தக்கூடிய மருத்துவ, உளவியல், சமூகவியல் ஆய்வுகள் நடந்தேறிவிட்டன. இவற்றையெல்லாம் எடுத்துக் கூற இடம் போதாது. அமெரிக்காவைச் சேர்ந்த குழந்தை மருத்துவப் பேராசிரியையின் கருத்தொன்றை நோக்குவது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும்.

'மருத்துவ விஞ்ஞானம் போசாக்குணவில் பாரிய சாதனைகளை ஈட்டியுள்ளதை நாம் ஏற்கத்தான் வேண்டும். ஆனால் தாய்ப்பாலின் மிகச் சிறிய ஒரு பங்கையே அதனால் ஈடு செய்ய முடிகின்றது. ஒரு போதும் தாய்ப் பாலுக்கீடாக இன்னொருபாலை உற்பத்தி செய்வது முடியவே முடியாது' என்கிறார்.

இப்பருவத்தில் குழந்தையின் உடல் வேகமாக வளரத் தொடங்குகிறது. இந்தத் தொடர்ச்சியான உடல்வளர்ச்சியில் குழந்தை சில விஷேட பண்புகளைப் பெற்றிருப்பதையும் அவதானிக்க முடியும். எனவே தாய் பாலூட்டும் நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகும். குழந்தை அழும் போதெல்லாம் பாலூட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அழுகையை நிறுத்துவதற்காகவும் பாலூட்டக் கூடாது. இது குழந்தையின் பசியார்வத்தைப் பலவீனப்படுத்திவிடும். எதிர்காலத்தில் அதனைக் கட்டுப்படுத்தவும் முடியாமற் போய்விடும்.

குழந்தைக்குப் பாலூட்டும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய விடயங்கள் உள்ளன. அவற்றை இப்போது நோக்குவோம்.

* குழந்தையைப் பெற்றெடுத்த தாய் சிறிது நேரம் ஓய்வெடுத்து பிறகு குழந்தைக்கு தாய்ப்பாலூட்ட ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு குழந்தை பிறந்த ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்குள் பால் கொடுப்பதன் மூலம் தாய்ப்பால் உற்பத்தியை அதிகப்படுத்தலாம்.

* பால் கொடுக்கும் போது உட்கார்ந்துகொண்டு மடியில் குழந்தையை வைத்து கைகளால் தலையை சொகுசாகவும், பாதுகப்பாகவும் அணைத்துக் கொடுப்பது நல்லது. ஒவ்வொரு முறையும் இரு மார்புகளில் இருந்தும் பால் கொடுக்க வேண்டும்.

* குழந்தை பாலுக்காக அழும் போதெல்லாம் பால் கொடுக்க வேண்டும். மணியைப் பார்த்துப் பால்கொடுப்பது நல்லதல்ல. குழந்தை போதுமான அளவு குடித்தவுடன் தூங்கிவிடும். அல்லது இறுகப் பிடித்திருந்த கைகளைத் திறந்து விரல்களை நீட்டும், அல்லது சிரிக்கும். தொடர்ந்து குடிப்பதை நிறுத்திவிடும். அதற்குமேல் கட்டாயப் படுத்தி பால் கொடுக்கக் கூடாது.

* முதல் மூன்று, நான்கு நாட்களுக்கு பாலின் அளவு குறைவாகவே இருக்கும். ஆனால் குழந்தையின் தேவைக்கு இது போதுமானது. இதைச் 'சீம்பால்' என்று சொல்வார்கள் இந்தப் பால் வியாதிகளைத தடுக்கும் திறன் கொண்டது. பிறந்த குழந்தைகளை பல கிருமிகளிலிருந்து பாதுகாக்க வல்லது. குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான பல ஊட்டப் பொருட்கள் இந்த சீம்பாலில் இருப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ உலகம் கூறுகின்றது. எனவே இப்பாலை தயவு செய்து வீணாக்கி விடாதீர்கள். வீணாக்கிவிட்டு வேறு நீராகாரத்தை கொடுப்பது மிகவும் தவறாகும்.

* பெரும்பாலான தாய்மார்கள் தனக்குப் பால் போதவில்லை என நினைத்துப் பயந்து புட்டிப் பாலை நாடுவதைப் பார்க்கின்றோம். ஆனால் குழந்தை குடிக்க குடிக்க தாய்ப்பாலின் அளவு முதல் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கும். இவிவடைப்பட்ட காலப்பிரிவில் தாய்க்கு தன்னம்பிக்கையும், தைரியமும், பொறுமையும் அவசியமாகும்.

* பால் போதுமானதாக இல்லை என்பதால்தான் குழந்தை அழுது கொண்டே இருக்கிறது என முதல் குழந்தை பெற்ற தாய்மார்கள் நினைப்பார்கள். ஆனால் குழந்தைகள் அழுவதற்குப் பல காரணங்கள் இருக்கும். சில வாரங்களைத் தொடர்ந்தே குழந்தை எதற்காக அகின்றது என்பது தெரியவரும். எது பசிக்கான அழுகை, எது ஈரமானதற்கான அழுகை, எது தூக்கத்துக்கான அழுகை என்று வித்தியாசம் புரிந்துவிடும். இவ்வாறு புரிந்துகொள்ளும் வரை தாய்மார் தைரியத்தோடு பாலூட்டுவது அவசியமாகும்.

* குழந்தை தாயின் மார்பில் பாலருந்தும்போது தனது கைகளால் தாயின் மார்புப் பகுதியை தடவிக்கொண்டே அருந்துகின்றது. இவ்வாறு தடவப்படுவதால் மார்புப் பகுதியில் இரத்தம் சீராகப் பாய்கின்றது. இதனால் தாய் மார்புப் புற்றுநோயிலிருந்து காப்பாற்றப்படுவதாக நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புட்டிப்பால் கொடுப்பதால் இந்த நோய்ப்பாதுகாப்பு கிட்டுமா? புட்டிப்பால் குடிக்கும் குழந்தைதான் இரவில் பலமுறை எழுந்து தாய்க்குத் தொந்தரவு கொடுக்கின்றது. தாய்ப்பால் போதியளவு அருந்திய குழந்தை நிம்மதியாக உறங்குவதை அனுபவத்தில் உணரலாம்.

அவ்வாறே குழந்தை உறங்கும் நேரத்தையும் வழிக்கும் நேரத்தையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். இது குழந்தையை ஆரோக்கியமான வாழ்வுக்கை ஒழுங்குக்குப் பழக்குவதாக அமையும்.

இப்பருவத்தில் குழந்தை உட்காரவும் தவழ்ந்து செல்லவும், எழுந்து நிற்கவும் பின்னர் தத்தித் தத்தி நடக்கவும் கற்றுக் கொள்கின்றது. இச்சந்தர்ப்பங்களில் குழந்தையை விரும்பியவாறு இயங்குவதற்கு சுதந்திரமாக விடுவதும் அவசியமாகும். அதே நேர்ம் சற்றுத் தூரத்திலிருந்து குழந்தையைக் கண்காணிக்கவும் வேண்டும். தேவைப்பட்டால் மாத்திரம் குழந்தைக்கு உதவ வேண்டும். அல்லது நன்னடத்தையின் பக்கம் ஊக்குவிக்க வேண்டும்.

இப்பருவத்திலிருந்தே குழந்தை மொழியைக் கற்க ஆரம்பிக்கிறது. அது பேச ஆரம்பிக்கும் போது நாம் 'லாஇலாஹ இல்லல்லாஹ்வை' சொல்லிக் கொடுக்க வேண்டும்.

'உங்கள் குழந்தைகளுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ்வை சொல்லிக் கொடுத்து பேச்சை ஆரம்பித்து வையுங்கள்.' (ஆதாரம் : அல்ஹாகிம்) என்ற இறைத்தூதரின் கூற்று இதனையே சுட்டிக் காட்டுகின்றது.

தேவையானபோது குரலை உயர்த்தவும், தாழ்த்தவும் குழந்தைக்குப் பழக்குவதோடு நல்ல சொற்களைப் பேசப் பழக்கவும் வேண்டும். அதற்கு வசதியாக நல்ல சொற்களை மனனமிட வைப்பதோடு சந்தர்ப்ப துஆக்களையும் இப்பருவத்தில் கற்றுக் கொடுக்கலாம்.

இப்பருவத்தில் பிறரைப் பற்றி அறியும் ஆவல் ஏற்படுவதோடு சமூக உணர்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையிடம் வளர ஆரம்பிக்கன்றது. குழந்தை தன்னைச் சூழவுள்ள பெரியவர்களினதும், சிறியவர்களினதும் நடத்தைகளை அப்படியே பழகிக் கொள்ள ஆரம்பிக்கும் பருவமும் இதுதான். எனவே இவர்களின் முன்னால் பெரியவர்கள் தமது, நடத்தை, பேச்சு, அசைவு ஆகியவற்றை இஸ்லாமியப் பண்பாட்டுக்கேற்ப அமைத்துக் கொள்வது அவசியமாகும். நிகழ்காலத்திலோ எதிர்காலத்திலோ அவை குழந்தையின் எதிர்காலத்தைப் பாதிக்கமல்பார்த்துக் கொள்ள வேண்டும். பெரியவர்களின் நடத்தையை நெறிப்படுத்துவது போன்று தமது குழந்தையோடு பழகுவதற்கு ஏனைய குழந்தைகளைத் தெரிவு செய்யும் போதும் நாம் இதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும். குழந்தை கெடுவதற்கு அதனோடு பழகும் அடுத்த குழந்தையே காரணம் என்பதை நாம் அனுபவவாயிலாக அறியமுடியும். இப்பருவத்தில் குழந்தை தன்னிச்சையாக விளையாட ஆரம்பிப்பதையும் அவதானிக்கலாம். ஓடுவதும், பாய்வதும், பிடிப்பதும் இந்தவகைச் செயற்பாடுகளே. எனவே குழந்தை விரும்பியவாறு விளையாடுவதற்கு இடமளிக்க வேண்டும். அது விளையாடும் போது அதற்கு ஆபத்து நேர்ந்துவிடாவண்ணம் அதனைக் கண்கணித்துக் கொள்வதும் அவசியமாகும். குழந்தையின் தசை நார்கள் இயங்கவும் சுறுசுறுப்பாக செயற்படவும் இது அவசியமாகின்றது.

ஒரு குழந்தை தனது உடலுருப்புக்களை அறிய முயல்வதும் இப்பருவத்தின் தனிப்பண்பாகும். இதன் வெளிப்பாடாக கரமைதுனப் பழக்கத்தை குழந்தையிடம் அவதானிக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் குழந்தையின் கையில் அடிக்காமல் குழந்தையின் கவனத்தை வேறுபக்கம் திருப்ப முயல வேண்டும். ஒரு விளையாட்டுப் பொருளை கையில் கொடுத்தோ அல்லது பேச்சின் மூலமோ அல்லது குழந்தையின் ஆடையை சரிபடுத்தியோ இதனைத் தடுக்கலாம். மேலும் குழந்தையை அடிக்கடி சுத்தப்படுத்தி வைத்திருக்க வேண்டியதும் தாயின் கடமையாகும். அதனை பணிப்பெண்ணிடம் ஒப்படைத்துவிடுபவளாக இருந்துவிடக் கூடாது.

குழந்தைக்கு பால்குடி மறக்கடிப்பதோடு இப்பருவம் முடிவடைந்துவிடுகின்றது. தாய்ப்பாலில் முற்றாகத் தங்கியிருக்கும் நிலையிலிருந்து குழந்தை வேறு உணவுகளை உண்ணும் நிலைக்கு மாறுகின்ற கட்டமும் இதுதான். அதே நேரம் இது குழந்தைக்கு அசௌகரியமான கட்டமும் ஆகும். தாய் படிப்படியாகத் தான் பால் குடித்தலை மறக்கச் செய்ய வேண்டும். ஒரு போதும் தடீரென்று பால் கொடுப்பதை நிறுத்திவிடக் கூடாது. அது குழந்தைக்கு உளவியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதோடு எதிர்காலத்தில் தாய் சேய் உறவையும் பாதிக்கச் செய்யலாம்.

## தசை இயக்கப் பருவம்

இது இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான காலப்பகுதியை உள்ளடக்கியது. இப்பருவத்தை உளவியலாளர்கள் பின்வருமாறு விளக்குகின்றனர்.

'உடல் வளர்ச்சி மிக வேகமாக நடைபெறும் கட்டம் இதுவாகும். ஆனால் முன்னைய பருவத்தைவிட. இதில் வளர்ச்சி வேகம் மந்தமாகவே காணப்படும். உள உடல் சமநிலை கழிவகற்றல் செயற்பாட்டில் நேர்த்திசை இயக்கச் செயற்பாடுகளின் அதிகரிப்பு, சுற்றுப்புற சூழலை அறிய முயற்சித்தல் போன்றவற்றை இப்பருவத்தில் அவதானிக்கலாம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு வகையில் இப்பருவத்தில் மெதுவான உடல் வளர்ச்சியே காணப்படுவதால் குழந்தைக்கு நிறையுணவு கிடைப்பதில் தாய் மிகக் கவனமாக இருக்க வேண்டும். குழந்தையின் பொதுவான உடலாரோக்கியத்தைக் கவனிப்பதோடு அதற்கு நோய்வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பருவத்தில் குழந்தை உண்ணவும் பருகவும் நேரங்களை ஒழுங்குபடுத்திக் கொடுப்பதோடு அதனோடு தொடர்பான இஸ்லாமியப் பண்பாடுகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்பண்பாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு பல வழிமுறைகளக் கையாளலாம். குழந்தை இவற்றைப் பழக்கத்தில் கொண்டுவர பலமுறை உணர்த்த வேண்டியிருப்பதால் அது பற்றி சலிப்படைந்துவிடக் கூடாது. உண்ணும் ஒழுங்கைப் பற்றி இறைத்தூதர் சொல்லும் போது,

'குழந்தாய் அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய். வலது கையால் சாப்பிடு' என்று அன்புக் கட்டளை பிறப்பித்தார்கள்.

உண்ணும் போது கடைபிக்க வேண்டிய ஒழுங்குவிதிகளை இமாம் கஸ்ஸாலி பின்வருமாறு தொகுத்துத் தந்துள்ளார்.

'இப்பருவத்தில் குழந்தையை மிகைத்திருக்கும் பண்பு உணவுண்ணும் பேராவலாகும். எனவே உணவுண்பதில் பின்வரும் ஒழுக்கங்களை கற்பிப்பது அவசியமாகும். வலது கையால் உணவை எடுத்தல், எடுக்கும் போது அல்லாஹ்வின் பெயரைக் கூறல், அருகிலுள்ளதைச் சாப்பிடல், அதற்கப்பால் செல்லாதிருத்தல், உணவுத்தட்டையோ, உணவுண்பவர்களையோ உற்றுப் பார்ப்பதைத் தவிர்த்தல், வேகமாகச் சாப்பிடுவதைத் தவிர்த்தல், நன்கு மென்று சாப்பிடுதல் கையை உணவில் புதைத்து அளையவோ, ஆடையை அழுக்குப்படுத்தியோ சாப்பிடுவதைத் தவிர்த்தல். உணவை மேலாகக் கருதுவது போன்று அதை அளவுக்குமீறிப் பொருட்படுத்தாமலும் பார்த்துக் கொள்ளல். தரம் குறைந்த உணவாயினும் திருப்தியோடு உண்ணல்' என்பனவே அப்பழக்கங்களாகும்.

இவ்வாறு உணவுண்டு முடிந்ததும் உணவளித்த அல்லாஹ்வைப் புகழ வைப்பதோடு குழந்தைகளின் கைகளை கழுவச் செய்ய வேண்டும். ஏதாவது உணவுப் பதார்த்தங்களையோ பானங்களையோ அருந்தும் போது அல்லாஹ்வின் பெயரைக் கூறி ஆரம்பித்து ஒரே மூச்சில் குடிக்காமலிருத்தல் பாத்திரத்தில் சுவாசிக்காமலிருத்தல் போன்றவற்றைப் பார்த்துக் கொள்வதோடு குடித்து முடிந்ததும் அல்லாஹ்வைப் புகழ வேண்டும்.

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِي أَطْعَمَنِي وَسَقَانِي

இப்பருவத்தில் கழிவகற்றல் செயற்பாட்டின் போது கடைபிடிக்க வேண்டிய இஸ்லாமியப் பண்பாட்டையும் குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பது அவசியமாகும். அதாவது மலசல கூடம் போன்ற மறைவான இடத்திற்கு செல்லுதல், இடது காலால் நுழைதல், கழிவகற்றிய பின் இடது கையால் சுத்தம் செய்தல். வெளியேறிய பின்,

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِى أَذْهَبَ عَنِّى الْأَذَى وَعَافَانِي

என்ற துஆவை ஓதுவதற்கும் பழக்க வேண்டும். குழந்தையை சுயமாக சுத்தம் செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்குவதோடு அது சிறந்த முறையில் சுத்தம் செய்யப் பழகும் வரை தாயும் குழந்தைக்கு உதவ வேண்டும்.

குழந்தை உறங்கச் செல்லும் போது அதற்குறிய ஒழுக்கங்களையும் குழந்தைக்குப் போதிக்க வேண்டும். அதில் ஒன்றுதான் செல்லுமுன் 'வுழு' செய்துகொள்வதாகும். இதைப்பற்றி இறைத் தூதர்

'நீ படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்கு வுழு செய்வது போன்று செய்துகொள்.' என்று குறிப்பிட்டார்கள்.

அத்துடன் கீழ் வலது கையை வைத்து வலப்பக்கமாக சாய்ந்து படுப்பதற்கும் குழந்தையைப் பழக்க வேண்டும். பின்னர் உறங்கும்போது ஓதும் துஆவை சொல்லிக் கொடுக்க வேண்டும்.

أَللّٰهُمَّ بِاسْمِكَ أَحْيَا وَ بِاسْمِكَ أَمُوتُ

உறங்கி விழிக்கும் போது பின்வரும் துஆவை சொல்லிக் கொடுக்க வேண்டும்.

أَلْحَمْدُ لِلّٰهِ الَّذِي أَحْيَانَا بَعْدَمَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُورُ

மேலும் ஆயத்துல் குர்ஸீ, சூரத்துல் பகராவின் இறுதிப் பகுதி போன்ற சில அல்குர்ஆன் வசனங்களையும் குழந்தை மனனமிடச் செய்ய வேண்டும். குழந்தையை நேரத்தோடு உறங்கவைத்து நேரத்தோடு எழுப்பிப் பழக்க வேண்டும்.

குழந்தைக்கு உடை அணிவிக்கும் போதும் அதற்குரிய துஆவை கற்றுக் கொடுக்கலாம்.

أَلْحَمْدُ لِلّٰهِ الَّذِى كَسَانِى هَٰذَا وَرَزَقَنِيهِ مِنْ غَيْرِ حَوْلٍ مِنِّى وَلَا قُوَّةٍ

குழந்தை உடையை கழற்றும் போது,

بِسْمِ اللّٰهِ الَّذِى لَا إِلٰهَ إِلَّا هُوَ

என்று சொல்லிக் கொடுக்கலாம்.

## புலனியக்க வளர்ச்சிகள்

இப்பருவத்தில் குழந்தையின் தொழிற்பாடுகளில் வலிமை, விரைந்து பதில் சொல்லுதல், பல்வகைச் செயற்பாடுகள், அழகுறச் செய்தல் போன்ற பண்புகளை அவதானிக்க அவதானிக்க முடியுமென உளவியலாளர் தெரிவிக்கின்றனர். இப்பருவத்தில் காணப்படும் தொழிற்பாடுகள் முன்னைய பருவத்தின் வளர்ச்சியாயினும் தொடர்பற்றதொன்றாகவே காணப்படும். முதலாவது பருவத்தில் உடலியக்க வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தசைநார்த் தொகுதிகளோடு சுருங்கியிருந்தது. அதன் பிறகே குழந்தை படிப்படியாக முதிர்ச்சிப் பருவத்தை நோக்கிச் செல்வதால் பயிற்சி மூலம் சிறிய தசை நார்களையும் இயக்கப் பழகிக் கொள்கின்றது. இப்பருவத்தில் ஓடுதல், பாய்தல், ஏறுதல், தள்ளுதல், போன்ற உடலியக்கத் திறன்களையும் இடித்தல், தோண்டுதல், எறிதல் போன்ற கைவினைத் திறன்களையும் பெற்றிருப்பர் பொதுவாக குழந்தைகள் இப்பருவத்தில் சுறுசுறுப்போடு காணப்படுவர்.

மூன்றாவது வயதின் இறுதியிருந்து குழந்தைப் பருவத்தின் இறுதிவரை குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கான ஒரே சாதனம் விளையாட்டாகவே இருக்கும். எனவே ஒழுக்கப் பெறுமானங்களையும் சமூகப் பண்பாடுகளையும் குழந்தையின் உள்ளத்தில் பதியச் செய்வதில் இந்த உடலியக்கப் பருவத்தையும் விளையாட்டின் மீதான நாட்டத்தையும் நாம் பயன்படுத்திக் கொளவது அவசியமாகும். இதன் மூலம் குழந்தை ஒழுங்கு, நேர்த்தி, ஒத்துழைப்பு, பிறரை மதித்தல், பிறருடன் பழகும் முறை ஆகியவற்றை கற்றுக் கொள்ளும். இவை சமூகத்தை அறியவும் சமூகத்தோடு நல்லுறவைப் பேணவும் வழிவகுக்கும்.

விளையாட்டின் தரம், பொருத்தப்பாடு, அதற்குரிய நேரம், இடம் என்பவற்றுக்கேற்ப குழந்தை விளையாடக் கூடிய சிறந்த விளையாட்டுக்களைத் தெரிவு செய்வது பெற்றோரின் கடமையாகும். இந்த விளையாட்டுக்கள் குழந்தையின் வயது அதன் உணர்வாற்றல், அதை விளையாடக் கூடிய உள, உடல் சக்தி என்பவற்றையும் கருத்திற் கொண்டு அமைந்திருக்க வேண்டும்.

'உங்களுடைய குழந்தைகளுக்கு நீச்சல், அம்பெறிதல், குதிரைச் சவாரி ஆகிய விளையாட்டுக்களை கற்றுக் கொடுங்கள்' என்று உமர் (றழி) அவர்கள் குறிப்பிட்டுள்ள இவ்வகையான விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுக்கலாம்.

இவற்றோடு, சேர்த்து மணல் விளையாட்டு, நீர்விளையாட்டு வரைதல், நிறங்களைப் பிரித்தறியும் விளையாட்டுக்கள். பந்து விளையாட்டுக்கள் என குழந்தையின் வயதுக்கும், சக்திக்கும் ஏற்ற நவீன விளையாட்டுக்கள் வரை அதற்குப் பழக்கலாம்.

இப்பருவத்தில் பாடசாலைக்குச் சேர்ப்பதற்குத் தயார்படுத்தும் முகமாக நுண்ணிய தசைநார்களுக்குரிய பயிற்சிகளையும் குழந்தைகளுக்கு வழங்குவது அவசியமாகும். தசை நார் வளர்ச்சிக்கு உதவக் கூடிய வரைதல் கருவிகளை வாங்கிக் கொடுப்பதனூடாக இப்பயிற்சியை வழங்கலாம். அத்தோடு குழந்தைகளை எழுதுவதற்கு நிர்ப்பந்திக்கக் கூடாது. அவர்கள் விரும்பியவாறு கொடுகளைக் கீறவும், சித்திரங்களை வரையவும் விட்டுவிட வேண்டும். நுண்ணிய தசை நார்களைப் பயிற்றுவிப்பதற்கு இதுவே சிறந்த வழிமுறையாகும்.

## புலனுணர்ச்சி

முதிர்ச்சியின் ஆரம்பம் என்பதால் இப்பருவம் குழந்தையின் புலனுணர்ச்சியை ஏதோ ஒரு வகையில் வேறுபடுத்தி அறியக்கூடியதாகவே இருக்குமென உளவியலாளர் கருதுகின்றனர். அதாவது குழந்தை முகர்தல், சுவைத்தல், கேட்டல், பார்த்தல் தொடுதல் ஆகிய பல்வகைப் பண்புகளினூடாக வெளி உலகையும் அதன் தாக்கங்களையும் அறிய முயற்சிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வெளியுலகைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபடும் குழந்தை துன்பத்துக்கும் இன்பத்துக்கும் ஆளாக நேரிடும். அது பெற்றுக் கொண்ட அனுபவத்திற்கேற்ப குழந்தையின் மனதில் ஆழ்ந்த தாக்கத்தையும் ஏற்படுத்தும். எனவே குழந்தை கண்டதில் புலனுணர்ச்சிகள் வளர்ச்சியடைய வேண்டுமாயின் இஸ்லாமிய நம்பிக்கையோடு முரண்படாத சரியான வழிகாட்டலை வழங்குவது அவசியமாகும். அல்லாஹ்வின் பரபஞ்சம் அவனது படைப்புக்களான பால்வெளி, வானம், பூமி, தாவரம், மிருகம், மனிதன், நதி போன்றவற்றை உற்றுநோக்குவதன் மூலம் குழந்தையின் பார்வைப் புலனை பயிற்றுவிக்க முடியும். இவ்வாறு உற்று நோக்குவதன் மூலமாக அல்லாஹ்வை நினைவுகூறவும் அவனது மாட்சிமையை அன்பை குழந்தையின் உள்ளத்தில் ஏற்படுத்தவும் முடியும்.

குர்ஆனின் வசனங்களையும் இதயத்தின் ஆழத்தைத் தொடும் இஸ்லாமிப் பாடல்களையும் கேட்கச் செய்வதனூடாக குழந்தையின் கேள்விப் புலனை வளர்ச்சியடையச் செய்யலாம். அதே நேரம் தீய, கெட்ட வார்த்தைகள், ஆபாசப் பாடல்கள், வெற்று வார்த்தைகள், பொய், புறம், காரணத்துடனோ, காரணமின்றியோ செய்யப்படும் பொய்ச் சத்தியங்கள், சாட்சியங்கள் போன்றவற்றைக் கேட்பதிலிருந்து குழந்தையை தடுப்பதும் அவசியமாகும்.

முகர்தல், சுவைத்தல் என்ற இரு புலன்களையும் பொறுத்தவரையில் பயன்தரும் பொருட்களை முகர்ந்து பிரித்தறியவும் அவற்றைச் சுவைத்து உண்ணவும் செய்வதோடு, தீங்கு பயக்கும் பொருட்களை ஒதுக்கிவிடவும் பழக்கலாம்.

சூடான பொருட்களை ஸ்பரிசிக்கப் பழக்குவதனூடாக குழந்தையின் தொடுகை உணர்வை வளர்க்க முடியும். ஆனால் மின்னழுத்தி, இரசாயனப் பொருட்கள், மருந்துகள் போன்ற தீங்கு பயக்கும் பொருட்களை குழந்தையின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் வைக்க வேண்டும்.

**பாலுணர்வு**

இப்பருவத்தின் தனிப்பண்புகளை விளக்க வந்த உளவியலாளர்கள் 'ஒரு குழந்தை தனது உடலுருப்புக்களை அறிவதனூடாகவே வெளியுலகு பற்றிய அறிவைப் பெற ஆரம்பிக்கின்றது.' என்று கூறியுள்ளார். என்வே ஒரு குழந்தை தனது உறுப்புக்களைப் பற்றியோ, அதைக் குறிக்கப்பயன்டும் பெயர்களைப் பற்றியோ அறிவது தவறாகாது என்பது இதிலிருந்து புலனாகின்றது. அத்தோடு இது பாலியல் கேள்விகளை குழந்தை அதிகமாகக் கேட்கும் பருவமாகும். எனவே குழந்தையைப் பயிற்றுவிப்போர் அதன் கேள்விகளுக்கு நுனுக்கமாகவும், தெளிவாகவும் அதன் வயதுக்கும் அறிவுத்தரத்துக்கும் ஏற்ற முறையில் பதில் சொல்ல வேண்டும். குழந்தையின் இக்கேள்விகளுக்கு பதிலளிக்காமல் தப்பித்துக் கொள்வது குழந்தையை வெட்கத்திற்கும் தர்மசங்கடத்திற்கும் உள்ளாக்கும். அப்போது குழந்தை பிறரை நாடி பிழையான விளக்கங்களையும் பெற்று தனது எதிர்காலத்தைப் பால்படுத்திக் கொள்ளவும் கூடும்.

குழந்தை : நான் எப்படி வந்தேன்?

பயிற்றுவிப்போர் : உன்னுடைய தாயின் வயிற்றிலிருந்து ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை : தாயின் வயிற்றுக்கு எப்படி வந்தேன்?
பயிற்றுவிப்போர் : அல்லாஹ்தான் மனிதனைப் படைக்கின்றான். உன்னைத் தாயின் வயிற்றில் படைத்தான். பின்னர் அவள் உன்னைப் பெற்றெடுத்தாள்.
குழந்தை : அப்படியானால் தந்தைக்கும் தாய்க்கும் என்ன தொடர்பு?
பயிற்றுவிப்போர் : குழந்தை உருவாக வேண்டுமானால் ஆணும் பெண்ணும் திருமணம் செய்ய வேண்டும்.

இவ்வாறு குழந்தைகளின் கேள்விகளுக்கு தெளிவாகவும் சுருக்கமாகவும் பதில் கூறத் தெரிந்திருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் விளக்க வேண்டிய அவசியமில்லை.

இப்பருவத்தில் பாலியல் தொடர்பான இஸ்லாத்தின் இன்னனொரு பண்பாட்டையும் குழந்தைக்கு அறிமுகம் செய்ய வேண்டியது பயிற்றுவிப்போரின் கடமையாகும். அதுதான் குழந்தை வீட்டின் அறைக்குச் செல்லும் போது அனுமதி கேட்கும் பண்பாடாகும். இதைப்பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது.

'ஈமான் கொண்டவர்களே உங்களுக்கு வலக்கரம் சொந்தமானவர்களும் இன்னும் பருவ வயதை அடையாத குழந்தைகளும் பின்வரும் மூன்று நேரங்களில் உங்களிடம் அனுமதி எடுத்துக் கொள்ளட்டும். பஜ்ர் தொழுகைக்கு முந்திய நேரம், பகற்பொழுதில் நீங்கள் உங்கள் ஆடைகளைக் களற்றி இளைப்பாறும் நேரம், இஷாத் தொழுகைக்குப் பிந்திய நேரம் ஆகிய மூன்று நேரங்களும் உங்களை மறைத்திருக்க வேண்டிய நேரங்களாகும்.' (அந்நூர் 58)

இமாம் குர்துபி இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கும் போது இம்மூன்று நேரங்களிலும் அனுமதி கேட்பவர் அவ்ரத்தை விளங்கக்கூடிய பருவத்திலுள்ள குழந்தைகளே என்று கூறுகின்றார். இங்கு குர்ஆன் குழந்தையின் விபரமறியும் வயதைக் குறிப்பிடவில்லை. அதைப்பயிற்றுவிப்போரின் முடிவுக்கே விட்டுள்ளது. ஏனெனில் குழந்தையின் சூழல், கல்வித்தரம் என்பவற்றுக்கேற்ப வயதைத் தீர்மானிப்பதில் வித்தியாசம் ஏற்படலாம். குழந்தை கேட்கும் கேள்விகளிலிருந்தும் அதன் அறிவையும் விவேகத்தையும் புரிந்துகொள்ள முடியும். பொதுவாக இரண்டு வயது நிரம்பாத குழந்தை பிரித்தறியும் தன்மையைப் பெற்றிருப்பதில்லை. எனவேதான் அதற்குப் பெற்றோரின் அறையில் இருக்கவும் முடியும். எனவே அனுமதி கேட்கும் பண்பாட்டை குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய மிகப் பொருத்தமான பருவம் மூன்றுவயதாகும். ஆனால் நான்கு வயதென்றும் சில இஸ்லாமிய அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே மூன்று வயதுக்கும் நான்கு வயதுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவை இப்பண்பாட்டைப் பயிற்றுவிக்கும் காலமாக எடுத்துக் கொள்ளவும் முடியும். அல்லது நான்கு வயதிலிருந்து பயிற்றுவிக்கவும் முடியும்.

இஸ்லாத்தின் இந்த அழகிய பண்பாட்டுக்கு குழந்தையை எப்படிப் பழக்கலாம் என்பதை இப்போது நோக்குவோம்.

- அனுமதியின்றி குழந்தை அறையில் நுழைந்தால் ஒரு முறையோ அல்லது பலமுறையோ திரும்பிச் சென்று கதவைத் தட்டுமாறு குழந்தையைப் பழக்க வேண்டும். அப்போது அக்குழந்தையும் சகோதரர்களைப் பின்பற்றி அனுமதியோடு அறையில் நுழைய பழகிக் கொள்ளும்.

- குழந்தை அவசரத் தேவை காரணமாக அனுமதியின்றி அறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழையக்கூடும். அப்போது அனுமதி எடுத்துக் கொண்டு வந்தால்தான் உனது தேவையை நிறை வேற்றுவேன் என்று கூறிக் குழந்தையைப் பயிற்றுவிக்கவும் முடியும்.

- வீட்டில் பணிபுரியும் பணியாட்களையும் அனுமதியோடு அறைகளுக்குள் நுழைவதற்குப் பழக்குதல் அவசியமாகும்.

- பிள்ளைகள் வாலிபப் பருவத்தைத் தாண்டும் போது பெற்றோர் அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் அறையில் திடீரென்று நுழையக் கூடாது. ஒரு சமிக்ஞையோடு நுழையும் போதுதான் அவர்களிடம் வெட்க உணர்வை வளர்க்க முடியும்.

இந்த வழிமுறை குழந்தையிடம் தூய்மையையும் ஒழுக்கத்தையுமே வளர்க்க உதவுகின்றது. இதனால் பாலியலோடு தொடர்பான அம்சங்களை குழந்தை மனிதனின் இயல்பான உணர்வாக கருத வழியேற்படுகின்றது. அதன்பின் பாலியலைப் பற்றிக் கேள்விப்படும்போது குழந்தை அதை மிருக உணர்வாக கருத மாட்டாது. பாலியல் பற்றிய சரியான கண்ணோட்டத்தைப் பெற்ற பின் நடத்தைப் பிறழ்வுக்கு வழியேற்பட மாட்டாது.

## அறிவு வளர்ச்சி

உளவியலாளர் இப்பருவத்தை கேளவி கேட்கும் பருவம் என்று அழைக்கின்றனர். அதாவது குழந்தை இரண்டு வயதைத் தாண்டும் போது தனது சுற்றாடலில் உள்ளவற்றைப் பார்த்து அது என்ன? ஏது? ஏன்? என அதிகமாகக் கேள்வி கேட்கும். இக்கேள்விகள் மூலம்தான் அக்குழந்தை ஒவ்வொன்றையும் அறிய முயல்கின்றது. குறிப்பாகத் தன்னைச் சுற்றியுள்ள புறவுலகை இக்கேள்விகளினூடாகவே குழந்தை புரிந்து கொள்கின்றது.

குழந்தையின் கேள்விகள் அவற்றின் வகை, உள்ளடக்கம் என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றது. எனவே பயிற்றுவிப்பொர் குழந்தையின் கேள்விகளுக்கு உண்மையான பொருள் பொதிந்த, குழந்தையின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற பதில்களைக் கூற வேண்டும். ஏனெனில் பூரணத்துவமில்லாத தவறானபதில்கள் எதிர்காலத்தில் குழந்தையின் நடத்தைப் பிறழ்வுக்கு வழிவகுக்கலாம்.

மேலும் தாய் குழந்தையைக் கேள்வி கேட்கத் தூண்ட வேண்டும். குழந்தையின் கேள்விகளுக்கு பதில் தராமல் தப்பித்துக் கொள்ளவும் கூடாது. அவ்வாறு தப்பித்துக் கொள்வதால் குழந்தை இன்னும் பல கேள்விகள் கேட்க வழிவகுக்கும். விடை கிடைக்காத போது குழந்தை தவறான அர்த்தங்களை எடுத்துக் கொள்ளும். இந்தக் கட்டத்தில் தாய் செய்ய வேண்டியதெல்லாம் மிகவும் புத்தி சாதுரியத்துடன் நடந்து குழந்தை சரியான பதிலைப் பெற வேண்டும் என்பதால் பதிலை காலம் தாழ்த்திச் சொல்லலாம். பதிலைக் காலம் தாழ்த்தியற்கான காரணத்தைக் குழந்தைக்குக் கூறவும் முடியும். எப்போது? எப்படி? கேள்வி கேட்க வேண்டுமென்பதையும் தாய் குழந்தைக்குப் பழக்க வேண்டும். இதனால் குழந்தை சரியாக சிந்திக்கவும் தனது நுண்ணறிவை வளர்த்துக் கொள்ளவும் முடியும். உயர்ந்த விடயங்களைப் பற்றிக் கேள்வி கேட்கப் பழகுவதோடு அற்ப விடயங்களைப் பற்றி கேட்பதையும் குழந்தை தவிர்த்துக்கொள்ளப் பழகிவிடும். இதனால் மேலெழுந்தவாரியான கேள்விகளுக்கான பதில்களில் குழந்தை தனது காலத்தை வீணடிக்கவும் மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் கேள்விகள் அவற்றின் வகை உள்ளடக்கம் என்பவற்றைப் பொறுத்து வேறுபடும் என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். எனவே குழந்தை அல்லாஹ்வைப் பற்றியோ அவனிருக்கும் இடத்தைப் பற்றியோ ஏன்? எப்படி? கேட்டால் நாம் என்ன சொல்வது? கேள்வி கேட்பது குழந்தையின் இயல்பு. குழந்தையை அல்லாஹ்வை நோக்கித் திருப்பும் பருவமும் இதுவே.

## அல்லாஹ்வை நம்புதல்

குழந்தை அல்லாஹ்வைப் பற்றிக் கேட்கும்போது பெற்றோரோ ஆசிரியரோ அச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றனர். அதாவது குழந்தைக்கு அதன் இறைவனை அறிமுகப்படுத்தி அவன் மீது நம்பிக்கையையும் அன்பையும் ஏற்படுத்த வேண்டியது பயிற்றுவிப்போரின் பொறுப்பாகும்.

இந்த இடத்தில் இஸ்லாத்தின் நம்பிக்கை கோட்பாட்டை சிறிது நோக்குவோம். உளவியலில் நமட்பிக்கைக் கோட்பாடு சமூக சூழலிலிருந்து கிடைக்கப் பெறும் அறிவுசா, நடத்தை சார் அம்சமாகவே நோக்கப்படுகின்றது. ஆனால் இஸ்லாம் நம்பிக்கையை மனிதனின் பூர்வீக உணர்வாக கருதுகின்றது. இந்தப் பூர்வீக உணர்வு அதற்கேற்ற சூழல் கிடைக்கும் போது வளர்ச்சியடைகின்றது.

'நபியே உமது இறைவன் ஆதத்தின் பிள்ளைகளாகிய அவர்களின் முதுகுகளிலிருந்து அவர்களின் சந்ததியைப் படைத்து அவர்களையே அவர்களுக்கு சாட்சியாக்கி, நான் உங்கள் இரட்சகனல்லவா? என்று கேட்க ஆமாம்! நாம் சாட்சி கூறுகின்றோம் என்றனர்' (அல்அ:ராப் 172)

இமாம் இப்னு கதீர் இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கும் போது 'இங்கு சாட்சியம் என்பது ஏக இறைவனை ஏற்றுக் கொள்ளும் மனிதர்களின் இயல்பைக் குறிக்கும். இக்கருத்தையே சான்றோர்களும் பின்வந்தோரும் கொடுத்தள்ளனர்.' எனக் கூறுகின்றார்.

மனிதனின் பூர்வீக மத உணர்வு பற்றி விளக்க வந்த பேராசிரியர் முஹம்மத் குத்ப் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஒழுக்க விழுமியங்களும் உயர் இலட்சியங்களும் மனித உள்ளத்தில் அதன் குறிப்பிட்டதோர் வளர்ச்சிக் கட்டத்தில் இயல்பாகவே உருவாகின்றன. புற வழிகாட்டல் அந்த ஒழுக்கப் பெறுமானங்களை வடிவமைத்து வரையறை செய்கின்றது. இதைவிட மிகவும் நுனுக்கமாகக் கூறுவதாக இருந்தால் மனித உள்ளம் இந்த ஒழுக்க விழுமியங்களையும் இலட்சியங்களையும் வெளிப்படுத்துவதற்கு இயல்பிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. இதை 'ஒவ்வொரு குழந்தையும் பூர்வீக மத உணர்வுடனேயே பிறக்கின்றது' என்ற என்ற இறைத் தூதரின் கூற்று உண்மைப்படுத்துகின்றது"

இறைவனை ஏற்கும் இயல்பு குழந்தையிடம் காணப்படுகின்றதென்றால் அதனை வளர்த்தெடுப்பது பயிற்றுவிப்போரின் கடமையாகும். அதாவது குழந்தை அல்லாஹ்வைப் பற்றிக் கேட்கும்போது அச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வை அவனது பண்புகள் பெயர்கள் ஊடாக அறிமுகப்படுத்த வேண்டும். அவ்வாறு அறிமுகப்படுத்தும் போது வலிந்து விளக்காமலும் திரிவு படுத்தாமலும் உவமிக்காமலும் இணைகற்பிக்காமலும் அல்லாஹ்வுக்குப் பொருத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும். அதே நேரம் இந்த அறிமுகம் குழந்தையின் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்றதாக இருப்பதோடு தெளிவாகவும் அமைய வேண்டும்.

உதாரணமாக 'அல்லாஹ் எதனைப் போன்றவனுமல்ல', அவன் எம்மைப் படைத்தவன். எமக்கு உணவளிப்பவன். தீமையிலிருந்து எம்மைக் காப்பவன். எதைக் கேட்டாலும் தருபவன். பிரார்த்தனைக்குப் பதிலளிப்பவன். எமது பாவங்களை மன்னிப்பவன். எல்லா நிலையிலும் எமக்கு அருள்பாலிப்பவன் அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன். வானம், பூமி, மலை, கடல், தாவரம், மிருகம் என முழுப்பிரபஞ்சத்தையும் படைத்தவன். அதன்மீது ஆட்சி புரிபவன். அவன் விரும்பியதைச் செய்யும் ஆற்றல் படைத்தவன். வெல்ல முடியாத சக்தி படைத்தவன். இவ்வாறு அல்லாஹ்வை அறிமுகப்படுத்தும் போது குழந்தையின் உள்ளத்தில் அவன்மீது அன்பும் மதிப்பும் உருவாகும். உயரம், குறுக்களவு போன்ற மனித அளவீடுகளை அல்லாஹ்வுக்கு வழங்கக் கூடாதென்றும் குழந்தைக்கு அறிவுறுத்தல் வேண்டும். குழந்தை அதன் வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் கட்புலனாகும் பொருட்களையே அறிந்து கொள்கின்றது. கற்புலனாகாத விடயங்களை அதனால் அறிய முடியாது. குழந்தையின் மனதில் அல்லாஹ்வைப் பற்றிய தவறான உருவம் பதிந்து விடாமலும் படைப்பினங்களோடு அவனை ஒப்பிட்டுவிடாமலும் அல்லாஹ்வை அறிமுகப் படுத்துவது முக்கியமாகும்.

குழந்தையின் வாழ்வில் இடம்பெறும் அல்லாஹ்வின் நேரடி, மறைமுக அருள்கள் மூலமும் அதன் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான அன்பை ஏற்படுத்த முடியும். உதாரணமாக நாம் பின்வருமாறு குழந்தையைப் பார்த்துக் கூறலாம். 'நீ உண்ணும் உணவு, உடுக்கும் உடை, விளையாடும் பொருட்கள் சுவைக்கும் மிட்டாய் எல்லாவற்றையும் அல்லாஹ்வே உனக்குத் தருகின்றான். அதற்காக நீ அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அப்போதுதான் அவன் உன்னை விரும்புவான். நீ கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுக்கப் பணத்தையும் தருவான்' என்று கூறுவதோடு நீங்கள் குழந்தைக்காக ஒரு விளையாட்டுப் பொருளை வாங்கினால். இதனை வாங்குவதற்கு உமது தந்தைக்குப் பணத்தைக் கொடுத்தவன் அல்லாஹ்வே என்று சொல்லவும் வேண்டும். அல்லாஹ்வின் அருட்கொடைகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குழந்தையிடம் இவ்வாறு கூறினால் அக்குழந்தை அல்லாஹ்வின் மீது அன்பு வைக்கும். அவனோடு தொடர்பு கொள்ள விரும்பி நிற்கும். அவனது ஆற்றலையும் அறிந்து கொள்ளும்.

எல்லாத் தேவைகளையும் அல்லாஹ்விடமே கேட்க வெண்டுமென குழந்தைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இது குழந்தையின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது அன்பை ஏற்படுத்தும். அல்லாஹ்விடம் கேட்குமாறும் பிரார்த்திக்குமாறும் குழந்தையைத் தூண்ட வேண்டும். இவ்வாறு கேட்பதையும் பிரார்த்திப்பதையும் அல்லாஹ்வும் விரும்புகின்றான்.

அவ்வாறே குழந்தையின் சில தேவைகளை நிறைவேற்றி வைப்பதாகக் கூறி அவற்றை அல்லாஹ்வின் அன்போடு தொடர்புபடுத்தியும் பயிற்றுவிக்கலாம். பெற்றோரின் பேச்சைக் கேட்க வேண்டுமென்றும் சகோதரர்களைத் துன்புறுத்தக் கூடாதென்றும் குழந்தை மேற்கொள்ளக் கூடிய நன்னடத்தைகளை வைத்து அதைச் செய்யலாம் அவ்வாறே பெற்றோரின் பேச்சைக் கேளாது சகோதரர்களைத் துன்புறுத்தி அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடும் பொருட்களை உடைத்துவிட்டால் அல்லாஹ் கோபப்படுவான் என்று கூறி குழந்தைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அதனைப் பயிற்றுவிக்கவும் முடியும். எனவே எல்லா நிலையிலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட வேண்டுமென குழந்தைக்கு அறிவுறுத்த வேண்டும்.

குழந்தையை அது இழைக்கும் தவறுகளுக்காக சுயவிசாரணை செய்யவும் பழக்க வேண்டும். நன்மை தீமையைப் பதிவு செய்யக் கூடிய மலக்குகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையும் குழந்தையிடம் ஏற்படுத்த வேண்டும். அப்போது எல்லா நிலையிலும் அல்லாஹ் எம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்று உணர வழிவகுக்கும்.

## அல் குர்ஆனைக் கற்றல்

அல்குர்ஆன் ஓதப்படுவதை செவிமடுப்பதன் ஊடாகவும் அதன் கருத்துக்களை விளக்கி குழந்தையைச் சிந்திக்க வைப்பதனூடாகவும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். இப்பருவத்தில் குழந்தையின் நுண்ணறிவும் விவேகமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக குழந்தையின் நினைவாற்றல் மனனமிடல் என்பவற்றில் இதனை அவதானிக்கலாம். எனவே குழந்தையின் இந்த ஆற்றலை விருத்தி செய்வது பெற்றோரின் பொறுப்பாகும். குழந்தைக்கு மூன்று வயதாகும் போது அல்குர்ஆனின் சிறிய அத்தியாயங்களை மனனமிடத் தூண்ட வேண்டும்.

'உங்கள் குழந்தைக்கு மூன்று பண்புகளைக் கற்றுக் கொடுங்கள். உங்கள் நபியின் மீது அன்பு வைத்தல். அவரது குடும்பத்தார் மீது அன்பு வைத்தல். அல்குர்ஆனை ஓதுதல் ஏனெனில் குர்ஆனை சுமந்தவர்கள் நிழலே இல்லாத நாளில் அல்லாஹ்வின் நிழலில் அவனது நபிமார்களோடும் தெரிவுசெய்யப்பட்டவர்களோடும் இருப்பார்கள்' (ஆதாரம் தபரானி)

இப்னு கல்தூன் தனது 'முகத்திமாவில்' குழந்தைகளுக்குக் குர்ஆனைக் கற்றுக் கொடுப்பது பற்றி கூறும் போது 'அல்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதுதான் இஸ்லாமிய நாடுகளின் கல்விக் கோட்பாட்டின் அடிப்படையாக இருக்க வேண்டும். இந்த மார்க்கத்தின் இலட்சனை அல்குர்ஆனே. ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு அதுவே ஒரே வழியாகும் என்கிறார்.

இப்னு ஸீனா தனது கிதாபுஸ்ஸியாசாவில் 'குழந்தைக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தல் பாடசாலைக் கல்விக்கு உடல் உள ரீதியாக தயார்படுத்துவதாக அமையும். அது குழந்தைப்பருவத்திலேயே அறபு மொழியில் பரிச்சயத்தை ஏற்படுத்துவதோடு உள்ளத்தில் இறை நம்பிக்கையையும் வளர்த்விடும்' என்று கூறுகின்றார்.

இமாம் கஸ்ஸாலி தனது இஹ்யாவில் 'குழந்தைக்கு முதலில் அல்குர்ஆனையும் பின் ஹதீஸையும் சான்றோரின் வரலாற்றையும் மார்க்க சட்டங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும்' எனக் கூறியுள்ளார்.

பொதுவாக மனித உளளத்தில் அல்குர்ஆனுக்கு ஆழ்ந்த தாக்கமுண்டு. உள்ளத்தின் தூய்மைக்கேற்ப அது தாக்கம் விளைவிக்கும் வீதமும் அதிகரிக்கும். குழந்தையின் உள்ளம் பெரியோரின் உள்ளங்களைவிடத் தூய்மையானது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளமோ கபடமோ இல்லாதது. மாசு மறுவற்றது.

அத்தோடு மக்காவில் இறங்கிய சூறாக்களை அவதானித்தால் அவை குறிப்பாக குழந்தைகளுக்கே இறங்கியவை போன்று காணப்படுகின்றன. அவற்றின் வசன அமைப்பும் ஓசை நயமும் குழந்தைகள் ஓதவும் மனனமிடவும் இலேசாக அமைந்துள்ளன. உதாரணமாக சூரத்துன் நாஸில் 'அந்நாஸ்' என்ற சொல் பலமுறை திருப்பித் திருப்பிக் கூறப்பட்டுள்ளதால் ஓதும் போது குழங்தை அதை விரும்பிக் கேட்கக்கூடியதாக உள்ளது. தஜ்வீத் முறைகளைப் பேணி குழந்தையை ஓதவும் மனனமிடவும் பழக்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

## அல்லாஹ்வின் தூதரை நம்புதல்

அல்லாஹ்வின்மீது அன்பு வைப்பதையும் அவனை நம்புவதையும் அடுத்து அவனது தூதரை நம்புவது வருகின்றது. இதனை வலியுறுத்தும் ஏராளமான வசனங்களை குர்ஆனிலும் ஹதீஸிலும் காணமுடியும்.

'நீங்கள் அல்லாஹ்வை விரும்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அவன் உங்களை விரும்புவான் என்று நபியே நீங்கள் சொல்லுங்கள்.' (ஆலஇமரான் 31)

உங்களில் ஒருவர் தன் தந்தையைவிடவும் தன் குழந்தையை விடவும் மனிதர்களில் அனைவரை விடவும் நான் அவரிடத்தில் மிகவும் விருப்புக்குரியவனாக மாறாத வரைக்கும் அவன் ஈமான் கொண்டதாக கருதப்படமாட்டார்.' மேற்குறிப்பிட்ட அனைத்தும் குழந்தைகளின் உள்ளங்களில் இறைதூதர் மீதான அன்பையும் நம்பிக்கையையும் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இது குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்து வரும்போது அல்லாஹ்வுக்கு அடிபணியவும் அவன் ஏவியதை ஏற்று விலக்கியதைத் தவிர்த்து நடக்கவும் வசதியாக இருக்கும். குழந்தைகளின் உள்ளங்களில் இறைதூதர் மீதான ஆழமான அன்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டுமாயின் பின்வரும் வழிமுறைகளை கையாள வேண்டும்.

* இறைதூதரின் வாழ்க்கை வரலாற்றை பிறப்பிலிருந்து இறப்புவரை நடந்த விடயங்களைக் கதையாக குழந்தைக்குக் கூற வேண்டும். அதிலே இறைத் தூதரின் ஒழுக்கம் கட்டுப்பாடு மனோதிடம் போன்ற ஆளுமைப் பண்புகளையும் குழந்தைக்கு எடுத்துக் காட்டவேண்டும். அது குழந்தையின் ஆளுமையை விருத்திசெய்யும் வகையில் அமையவும் வேண்டும். குழந்தையின் வயது, அறிவு, என்பவற்றுக்கேற்ப இறைத்தூதரின் வரலாற்றை எளிய நடையில் கதைப் பாணியில் ஆர்வமூட்டும் வகையில் கூறுவது அவசியமாகும்.

* அதே நேரம் இறைத் தூதருக்கு கொடுக்க வேண்டிய கண்ணியம் ஏனைய எல்லா மனிதர்களையும்விட அவருக்கேயுரிய தனிச்சிறப்பு என்பவற்றையும் குழந்தைக்கு எடுத்துரைக்க வேண்டும். இஸ்லாத்தைப் பரப்புவதில் இறைத்தூதருக் கேற்பட்ட இன்னல்களையும் கதையாகக் கூற வேண்டும். இறைத்தூதரின் பிரச்சார வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரிகள் இழைத்த கொடுமைகளையும் அதிலே இணைத்துக் கொள்ள வேண்டும்.

* இறைதூதரின் பெயர் எந்த நேரத்தில் எந்த இடத்தில் எந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுவதை செவிமடுத்தாலும் அவர் மீது சலவாத்து சொல்ல குழந்தையைப் பழக்க வேண்டும். இதற்கு இறைத்தூதரின் பின்வரும் ஹதீஸை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். 'எனது பெயர் ஞாபகப்படுத்தப்பட்டும் எனக்குச் சலவாத்துச் சொல்லாதவரை உண்மையில் உலோபியாவார்'

* இறைத்தூதர் தனது வாழ்வில் கடைப்பிடித்த ஒழுக்கங்களின்பால் குழந்தையைத் தூண்டுவதாலும் இறைத்தூதர் மீது குழந்தைக்கு அன்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த முடியும். உண்ணல், பருகல், உறங்கள், உடையணிதல், பயணித்தல், இறைவணக்கம் புரிதல், கொடுக்கல் வாங்கல், போன்ற ஒழுக்கப் பண்பாடுகளில் இறைத்தூதர் வழங்கிய வழிகாட்டல்களை குழந்தையின் வயதுக்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ப போதிப்பது அவசியமாகும்.

* இறைதூதர் ஓதிய சந்தர்ப்ப துஆக்கள், திக்ர்களை மனப்பாடம் செய்யப் பழக்க வேண்டும். முன் பந்தியிற் குறிப்பிட்டது போல உண்ணல், பருகல், உறங்கல், விழித்தல், வீட்டில் நுழைதல் வீட்டைவிட்டு வெளியேறல், கழிவகற்றல் போன்ற சந்தர்ப்பங்களில் இறைதூதர் ஓதிய துஆக்களையே இங்கு குறிப்பிடுகின்றோம். அத்தோடு குழந்தையின் அன்றாட வாழ்வில் வந்துபோகும் கட்டங்களுக்குப் பொருத்தமான துஆக்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

* இவ்வாறு இறைத்தூதரின் ஹதீஸ்களை மனனமிடவும் குழந்தையைப் பழக்க வேண்டும். ஹதீஸ்களை மனனமிடும்போது பின்வரும் ஒழுங்குகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

* மனனமிடும் ஹதீஸ்கள் நடத்தை, சமூகப் பண்பாடு, ஒழுக்கத்தின் உயர்வு வணக்கவழிபாடு நம்பிக்கை என்பவற்றை தழுவியதாக இருக்க வேண்டும்.

* ஹதீஸின் வசனங்கள் சிறியதாகவும், எளிய நடையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

* குழந்தையின் வயதுக்கும் அறிவுத்தரத்துக்கும் ஏற்றதாக ஹதீஸ்கள் இருக்க வேண்டும்.

* குழந்தைப் பருவத்து வாழ்க்கையோடு பொருந்துவதாயும் அவசியப்படுவதாயும் அந்த ஹதீஸ்கள் அமைய வேண்டும்.

குழந்தைப்பருவத்திலிருந்து இறைத்தூதர் மீது அன்பு செலுத்துவதற்கு நம்பிக்கை வைப்பதற்கு இவை சில வழிமுறைகளே. ஆனால் குழந்தையைப் பயிற்றுவிப்போர் இறைதூதரின் போதனைகளை தமது அன்றாட வாழ்வில் எடுத்து நடக்கும் உதாரண புருஷர்களாக திகழும் போதுதான் மேற்குறித்த பயிற்றுவித்தல் குழந்தையிடம் வெற்றியளிக்கும். பெற்றோரைக் கொண்டே குழந்தை கற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருக்க வேண்டும்.

இறைதூதரின் ஆளுமை பற்றிப் பேசும் போது குழந்தை உள்ளத்தில் பதியக்கூடியவாறு கவர்ச்சிரமான வழிமுறைகளையே கையாள வேண்டும். அவ்வாறே இறைத் தூதரின் செயலை விளக்கும் போது நேரப் பொருத்தத்தையும் குழந்தையின் அறிவுத்தரத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இறை தூதரின் சொல், செயல் என்பன குழந்தையின் எப்பருவத்தில் எந்த வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்றுக் கொள்ளும் என்பதையும் நாம் அறிந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதை அறியும் போதுதான் குழந்தைகளின் உள்ளங்களில் இறைதூதர் மீது அன்பையும் நம்பிக்கையையும் வளர்ப்பது பெரியளவில் சாத்தியமாகும்.

## கற்பனை வளர்ச்சி

குழந்தையின் இந்தப் பருவம் யதார்த்தத்தையும் மீறிய அதீத கற்பனா சக்தியைக் கொண்டது. குழந்தைகளிடத்தில் அதீத கற்பனா சக்தி தோன்றுவது இயல்பான அம்சமே. இதனால் இப்பருவத்தில் குழந்தைகள் பொம்மை விளையாட்டிலும் மண்சோறு ஆக்குவதிலும் மணல் வீடு கட்டுவதிலும் மூழ்கி விடுவதைக் காணலாம்.

குழந்தை தான் விளையாடும் பொம்மையை தன்னை நேசிக்கும் உற்ற நண்பனாக கருதுகின்றது. கையில் இருக்கும் தடியை பயணம் செய்யும் வாகனமாக கருதுகின்றது. இறை தூதர் (ஸல்) அவர்கள் குழந்தையின் இந்த கற்பனா சக்தியை நன்கு பயன்படுத்தி உள்ளார்கள்.ஹஸனும் ஹுஸைனும் குழந்தைகளாக இருக்கும் போது அவர்களை முதுகிலே ஏற்றிக்கொண்டு முழங்காலை நிலத்தில் வைத்து கைகளை ஊன்றிய வண்ணம் நடந்து இறைதூதர் பேரப்பிள்ளைகளை திருப்திப்படுத்தி உள்ளார்கள். அப்போது இப்படிச் சொன்னார்கள்.

'உங்களைச் சுமக்கும் ஒட்டகம் எவ்வளவு சிறந்தது! இருசுமைகளான நீங்கள் எவ்வளவு சிறந்தவர்கள்!'

குழந்தை இப்பருவத்தில் தானாகவே சிந்திக்கின்றது. அத்தோடு தன்னை மையப்படுத்தியே தன்னை சிந்திக்கவும் செய்கின்றது. பொதுவாக இப்பருவத்தில் தோன்றும் குறியீட்டுச் சிந்தனை கற்பனையாகவே காணப்படும். ஆறு வயதாகும் வரை அது யதார்த்த பூர்வமானதாக இருக்கமாட்டாது. அதாவது யதார்த்தத்திற்கும் அதீத கற்பனைக்கும் இடையிலான வேறுபாட்டை பிரித்தறிவதற்கு ஒரு குழந்தைக்கு நீண்ட நாட்கள் எடுக்கலாம்.

சில வேளைகளில் உண்மையான பிரச்சினைகளுக்கு ஒரு குழந்தை அதீத கற்பனைகள் மூலம் தீர்வு காண முடியும். அதாவது உண்மையையும் அதீத கற்பனையையும் திரிவுபடுத்துவதே அதற்கான காரணமாகும். அதீத கற்பனைகளாக குழந்தை கூறும் பிரச்சினைகளை யதார்த்த நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம்.

எனவே பயிற்றுவிப்போர் கற்பனைப் பொய்க்கும் யதார்த்த நிலையில் கூறப்படும் பொய்க்கும் இடையிலான வேறுபாட்டை பிரித்தறிய குழந்தையை பழக்க வேண்டும். யதார்த்த நிலையில் கூறப்படும் பொய் தடுக்கப்பட வேண்டும். ஆனால் கற்பனை உலகப்பொய் அவ்வாறானதல்ல. குழந்தை தான் வாழும் உலகை புரிய ஆரம்பிக்கும் போதே அதற்கு ஒவ்வொன்றாகத் தெறிய வரும்.

குழந்தையைப் பயிற்றுவிபபோர் குழந்தையின் கற்பனா சக்தியை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கற்பனை என்பது இறைவன் மனிதனுக்கு வழங்கிய அருட் கொடையாகும். அதை மழுங்கடிப்பது. இறை அருளுக்குச்செய்யும் துரோகமாகும். மாறாக அது நெறிப்படுத்தப்படுவதே முறையான செயலாகும். குழந்தையின் கற்பனா தாகத்தைத் தனிக்கக் கூடிய நல்லுபதேசக் கதைகளை அதற்கு கூற வேண்டும். அக்கதைள் இஸ்லாமிய ஒழுக்கமான்புகளுக்கு மாறுபடாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். உண்மைகளை சிதைக்காமல் மிகைப்படக் கூறாமல் யதார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமான கதைகளாகவும் இருக்கவும் வேண்டும். குழந்தையின் அறிவுத்தாகத்திற்கு ஏற்ப எளிய நடையில் கூறினால் இது ஆர்வத்தடன் கேட்கும்.

## மனவெழுச்சி வளர்ச்சி

இஸ்லாமிய பயிற்சிக் கோட்பாடு இந்தப் பருவத்தில் குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்துகிறது. குழந்தையின் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் வெளிப்படும் இயல்பூக்கங்களையும் முரண்பட்ட மனோ உணர்வுகளையும் அவசியப்படும் போது வெளிப்படுத்தவும் இல்லாத போது கட்டுப்படுத்தவும் குழந்தையை பழக்கவேண்டும். அதுவே மனச்சிக்கள்களிலிருந்து விடுதலை பெற உதவுகிறது. வீட்டிலும் பின்னர் பள்ளிக் கூடத்திலும் குழந்தையை பயிற்றுவிக்கும் ஆரம்ப கட்டத்தில் இது சற்று சிறமமானதே.

கடும் கோபம், ஆழ்ந்த அன்பு , அழுகை, சிரிப்பு போன்ற முன்பட்ட உணர்சிகள் காரணமாகவே இந்த கட்டத்தில் குழந்தையின மனவெழுச்சியின் வகை, கடுமை,மிகை என்பவற்றில் வித்தியாசப்பட்டே காணப்படுகிறது. எனவே பெற்றோர் குழந்தையின் முன்னால் தமது உணாச்சிகளை வெளிக்காட்டுவதில் மிகவும் நிதானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனனில் பெற்றோரிடமிருந்துதான் குழந்தை மனவெழுச்சியைப் பெற்று அதனை வளர்த்துக் கொள்கிறது. பின்னர் அக்குழந்தை தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவற்றை வெளிப்படுத்துவதற்கும் பழகிக்கொள்கின்றது.

குழந்தையின் மனவெழுச்சிகள் தன்மான உணர்வோடு கலந்து விடுவதால் குழந்தை தவறிலைக்கும் போது வெக்கப்படுகிறது. அதன் தன்நம்பிக்கையில் தளர்வேற்படுவதால் தன்னைத் தானே குறைகூறவும் முற்பட்டுவிடுகின்றது. இதனால் அதன் பயன் அதிகரிகிகன்றது. தனக்கு பாதுகாப்பு இல்லை என்பதை அது உணர்வதால் தனது சுற்றாடலில் தனக்கு அதிகாரமில்ல்ல என்பதையும் அது உணர்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் பெற்றோர் குழந்தையை தொடர்ந்து உற்சாகப்படுத்துவ தோடு அதன் உள்ளத்தில் தன்னம்பிக்கையும் ஏற்படுத்த வேண்டும். குழந்தை தன் மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கவும் வேண்டும். மனவெழுச்சிகளை அடக்குவது குழந்தையின் உள ஆரோக்கியத்துக்கு பாதிப்பாக அமையும். தகுந்த பாதுகாப்பு கிடைக்காவிட்டால் குழந்தை எதிலும் ஈடுபாடு காட்டாமல் தனிமையை நாடிச் செல்லும்.குழந்தையின் கோபம் சில வேளை வசனமாக அல்லது பிடிவாதமாக அல்லது பழிவாங்களாக அல்லது அத்து மீறலாக வெளிப்படலாம். இந்த கோபம் குழந்தையின் கோரிக்கை மறுக்கப்படும் போது அல்லது அடிப்படைத் தேவை நிறைவேற்றப்படாத போது அல்லது கடுமையாக தண்டிக்கும் போதே ஏற்படுகிறது. எனவேதான் இந்த கட்டத்தில் குழந்தையின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது அவசியமாகிறது . குழந்தையின் சக்திக்கு மீறிய எந்த பொறுப்பையும் அதன் மீது சுமத்தக் கூடாது. குழந்தையின் உடல் உள்ளுணர்வுகளுக்கு ஒத்து வராதவற்றையும் அதன் மீது திணிக்க கூடாது. அவ்வாறு திணிக்கும் போது நாமே குழந்தையை கோபப்படுத்துவதற்கும், பிடிவாதம் செய்வதற்கும் நிர்பந்தித்துவிடுகிறோம். இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபப்படுவதும், பிடிவாதம் பிடிப்பதும் குழந்தையின் பண்பாக மாறிவிடுகிறது. எனவே குழந்தையின கோரிகைகள் கூட்டல் குறைத்தல் இன்றி நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். நிறைவேற்றப்படாவிட்டால் ஏன் மறுக்கப்பட்டது என்பதையும் அதற்கு எடுததுக் கூறவும் வேண்டும்.

எடுத்ததெற்கெல்லாம் குழந்தையிடம் கட்டளை பிறப்பித்து கொண்டிருக்கக் கூடாது. எந்த நேரமும் அதைச் செய்! இதை செய்! எனக்கட்டாயப்படுத்தவும் கூடாது. இந்த நடவடிக்கை குழந்தை பிடிவாதம் செய்வதற்கும் கட்டளைக்கு மாறு செய்வதற்கும் நாமே ஊக்கவிப்பதாக அமையும். இச்சந்தர்ப்பங்களில் வெகுமதி அல்லது தண்டனை என்ற உலவியல் ஊக்கல் வழிமுறையை கையாளலாம். இது குழந்தையின் தளம்பலில்லாத உறுதியான ஒரு சமநிலையை தோற்றுவிக்க உதவி செய்யும். அப்போதுதான் ஒழுக்கப் பெறுமானங்கள் குழந்தையிடம் ஆட்டம் காணாமல் இருக்கும். இடத்திக்கேற்ப, சந்தர்ப்பத்திக்கேற்ப அவ்வொழுக்கங்களை கடைபிடிக்க பழகிக் கொள்ளும்.

குழந்தைகளின் மனவெழுச்சியின் ஒரு இஸ்திரமான நிலையை ஏற்படுத்த வேண்டுமாயின் அவர்களை பராமரிப்பதிலும், அன்பு காட்டுவதிலும் மிகவும் நீதியாக நடந்துகொள்ள வேண்டும். இதனை இறைத் தூதர் கூறும் போது 'முத்தமிடுவதில் கூட உங்களுடைய குழந்தைகளுக்கு மத்தியில் நீதியாக நடந்து கொள்ளுங்கள்' என்றார்கள்.

அனஸ் (றழி) அவர்கள் அறிவிப்பதாவது நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒரு மனிதர் இருந்தார். அவரை நபிகளார் தனது தொடையின் மீது அமரச் செய்தார். அப்போது அங்கே அவரது பேரக்குழந்தை ஓடிவந்தது. நபிகளார் அக்குழந்தையை மற்றத் தொடையின் மீது அமர்த்திவிட்டு, நான் இவ்விருவருக்குமிடையில் நீதியாக நடந்தேனல்லவா ? என்று கேட்டார்.

பொதுவாக இந்த பருவத்தில் குழந்தையிடம் காணப்படும் ஓர் உணர்வு தான் பொறாமையாகும். புதிதாக ஒரு குழந்தை பிறக்கும் போது முதலாவது குழந்தைக்கு இவ்வுணர்வு ஏற்படுகின்றது. இந்த பொறாமை உணர்வு வெளிப்படுத்துவதில் குழந்தைகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படும். சில குழந்தைகள் இந்த வெறுப்புணர்வை மறைத்துக் கொண்டு புதிய குழந்தையின் மீது தனது அன்பை வெளிப்படுத்தும். வேறு சில குழந்தைகள் தமது வெறுப்புனர்வை வெளிப்படையாகவே காட்டிவிடும். இன்னும் சில குழந்தைகள் விரல் சூப்புதல், மழலை மொழி பேசல், கழிவகற்றல் போன்ற குழந்தைப் பருவ நடத்தைக்கு திரும்புவதை அவதானிக்கலாம். பெற்றோர் தம்மை கவனிக்க வேண்டும், தன் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதை உணர்த்தலே குழந்தைகள் இவ்வாறு செயல்படுகின்றன. பெற்றோர் இக் குழந்தைகள் மீது விசேட கவனம் செலுத்துவதன் முலம் இவர்களிடம் காணப்படும் பொறாமை உணர்வை இல்லதொழிக்க முடியும். அதாவது அன்பு காட்டுவதில் - பராமரிப்பதில் நீதியாக நடப்பதன் முலமே இதனை முற்றாக ஒழிக்கலாம்.

மேற்குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் குழந்தையின்மனவெழுச்சியில் ஒரு சமநிலையை தோற்றுவிக்கலாம். இல்லாவிடின் குழந்தையின் மனச்சிக்கல்களுக்கும், நடத்தைப் பிறழ்வுகளுக்கும் நாமே வழியேற்படுத்திக் கொடுத்ததாக அமைந்துவிடும். இது குழந்தையின் உள ஆரோக்கியத்துக்கு பெறும் அச்சுருத்தலாக மாறும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. எனவே குழந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவெழுச்சியை கண்டறிந்து அவற்றை நெறிப்படுத்துவது பெற்றோரின் தார்மீகப் பொறுப்பாகும்.

## சமூக வளர்ச்சி

இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுவரையிலான காலப்பகுதி குழந்தை தனது பெற்றோருடனும், நண்பருடனும் பின்னர் அயலவர்களுடனும் சமூக ரீதியாக தொடர்பு கொள்கின்ற பருவமாகும். இந்த பருவத்தின் இறுதி வருடங்களில் குழந்தையானது குடும்பத்தில் சமூகப் பங்களிப்பை அதிகமாக ஆற்றுவதற்கும் முன்வருகின்றது. பெற்றோருக்கு உதவிசெய்வதிலும் அவர்களின் சாதாரண வேண்டுகோளை நிறைவேற்றக்கூட முண்டியடித்துக்கொண்டு ஓடிவருவதையும் நாம் காண முடியும். எனவே குழந்தை சமூக ரீதியாக தொடர்பு கொள்ளும் இப்பருவத்தில் அதனைப் பயிற்றுவிப்போர் இஸ்லாம் விதித்துள்ள சமூகப் பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுப்பது அவசியமாகும். குழந்தை சுயமாகவே அவற்றை கடைப்பிடிக்குமளவுக்கு எமது கற்பித்தல் அமையவேண்டும்.

இத்தகைய சமூகப்பழக்கவழக்கங்களில் ஒன்றுதான் வீட்டில் அல்லது அறைகளில் நுழையும் போது அனுமதி பெற்றுக்கொண்டு 'சலாம்' கூறிக் கொண்டும் நுழைவதாகும்.

'குழந்தாய்! உனது குடும்பத்திடம் செல்லும்போது சலாம் சொல்லிக்கொள். அது உனக்கும் உனது குடும்பத்திற்கும் அருளாக அமையும்.'

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இதனைக்கூறியதோடு மட்டும் நிற்கவில்லை. அதனைச்செயலிலும் காட்டினார்கள்.

அனஸ் (றழி) சிறுவர்களைக் கடந்து சென்றபோது அவர்களுக்குச் சலாம் கூறிவிட்டு அவர்களைப்பார்த்து இறைத்தூதர் இப்படிச் சொல்வார்கள் என்றும் கூறினார்'

மேலும் மற்றவர்களுடன் உரையாடும் ஒழுங்குமுறைகளையும் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். முதலில் பெற்றோருடனும் அடுத்து சகோதர்களுடனும் பின்னர் சமூகத்துடனும் எப்படி அன்போடும், கனிவோடும் உரையாட வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்கவேண்டும். சத்தத்தை உயர்த்தாமல் தாழ்த்திப் பேசுவதற்கும், அடுத்தவரின் பேச்சை இடைமறிக்காமல் கேட்பதற்கும், பொருத்தமான நேரத்தில் பேசுவதற்கும் குழந்தைகளைப் படிப்படியாகப் பழக்குவதும் அவசியமாகும். இவ்வாறு பேசுவதன் ஒழுக்கத்தை குழந்தைக்கு கற்றுக்கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

அடுத்து சபை ஒழுக்கங்களையும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இறைத்தூதரின் ஹதீஸ்களின் வாயிலாகப் பெற்ற இந்த ஒழுக்கங்களை இமாம் கஸ்ஸாலி பின்வருமாறு தொகுத்துத்தந்துள்ளார்.

'சபையில் அமரும் போது சபையோர் முன்னிலையில் மூக்குச்சீறவோ, கொட்டாவி விடவோ, புறமுதுகுக்காட்டி உட்காரவோ, காலுக்கு மேல் கால் போடவோ, நாடியில் கையூன்றவோ, தோல்பட்டையில் தலையைச்சாய்க்கவோ கூடாது. ஏனெனில் இவை சோம்பலின் அடையாளமாகும். உட்காரும் முறையையும், அதிகம் பேசக்கூடாதென்பதையும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதோடு அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணமின்மையைக்காட்டும் என்றும் அற்பர்களின் செயல் என்றும் குழந்தைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும். உண்மையாயினும், பொய்யாயினும் சிறுவயதிலேயே குழந்தைகள் தலையிலடித்து சத்தியம் தடுக்க வேண்டும். அதுவாகவே பேச்சை ஆரம்பிக்காமலும் பதிலுக்குத்தக்க கேள்வியின் அளவுக்குப் பேசுமாறும் குழந்தைகளுக்குப் பழக்க வேண்டும். அடுத்தவர் வயதில் பெரியவராக இருந்தால் அவர் எப்படி பேசினாலும் அவரது பேச்சைச் செவிமடுக்க வேண்டும். தனக்கு மேலுள்ளவர்களுக்கு எழுந்து மரியாதை செய்து அவர் உட்காருவதற்கு இடம் கொடுக்க வேண்டும். வெற்றுப்பேச்சு, வீண் விளையாட்டு,பிறரைத்திட்டுதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.'

சபையொழுக்கத்தை அடுத்து குழந்தையை உறவினர், நண்பர்களின் இல்லங்களிற்கு செல்வதற்கும் பழக்க வேண்டும். ஆரம்பத்தில் அவ்வீடுகளுக்குச் செல்ல வேண்டிதன் அவசியத்தை எடுத்துக்கூறி அவர்களுக்கு சலாம் கூற வேண்டுமெனபதையும் அவர்களின் வீட்டில் உள்ளவற்றை அவர்களின் அனுமதியின்றி எடுக்கக்கூடாது என்றும் குழந்தைகளுக்கு புத்திமதி கூறவேண்டும்.

பாதையில் செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளையும் குழந்தைகளுக்குக்கற்றுக் கொடுப்பது அவசியமாகும். பாதையில் செல்பவர் பாதைக்குரிய உரிமைகளக் கொடுக்க வேண்டுமென இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியபோது நபித்தோழர்கள், பாதைக்குரிய உரிமைகள் என்றால் என்ன? என்று கேட்டார்கள் அதற்கு இறைத்தூதர்

'பார்வையைத்தாழ்த்துதல், பிறரைத்துன்புறத்தாமை, சலாம் உரைத்தல், நன்மையை ஏவி தீமையைத்தடுத்தல்,' வேறோர் அறிவிப்பில் வழிப்போக்கனுக்கு வழிகாட்டுதல், தும்மலுக்குப் பதில் கூறுதல் மற்றோர் அறிவிப்பில் நாதியற்றவனுக்கு உதவுதல் இன்னொரு அறிவிப்பில் சுமைகளை ஏற்றிவிடுவதற்கு உதவுதல்' என வந்துள்ளன.

இவை போன்ற இஸ்லாத்தின் சமூகப்பண்பாடுகளை குழந்தையின் வயதிற்கும், அறிவுத்தரத்திற்கும் ஏற்ப சொல்லிக்கொடுக்க வேண்டும். ஒரேயடியாக குழந்தைகளிடமிருந்து உடன்பாடான சமூக நடத்தையினை எதிர்பார்க்க முடியாது. அதற்கு பல பிரயத்தனங்களைச் செய்ய வேண்டும். சிறந்த சமூகப்பண்பாடுகளைக் கற்றுக்கொடுப்பதனூடாகத்தான் குழந்தையின் தவறான நடத்தைகளைத் திருத்தியமைக்க முடியும். இப்பருவத்தில் குழந்தை முயன்று தவறுதல் மூலமே கற்கப்பழகுவதால் தொடர்ந்து உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும். பயிற்றுவதற்கு பல வழிமுறைகளையும் கையாண்டு பார்க்க வேண்டும். மிகவும் இக்கட்டான சந்தர்ப்பத்திலேயே குழந்தையின் பிழையான சமூக நடத்தையை அடித்துத்திருத்த வேண்டும்.

## ஒழுக்க வளர்ச்சி

இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுவரையிலான இந்தப்பருவம் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்ற பருவமாகும். ஒழுக்கங்களுக்கான உள்ளார்ந்த அர்த்தங்களைப்புரிந்து கொள்ள முடியாவிடினும் குழந்தை அவற்றைப்பின்பற்ற முடியுமான பருவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோ, கெட்டதோ குழந்தை தனக்குத்தெரிந்த எதையும் செய்வதற்குரிய அபார ஆற்றலை இயல்பிலே பெற்றுக்கொள்கிறது. ஒழுக்கத்தைப் பற்றி இமாம் மாவர்த்தியின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

'ஒழுக்கம் என்புது அனுபவத்தின் மீதும் அல்லது சிறந்த பழக்கத்தின் மூலம் கிடைக்கப்பெறுவதாகும். அது பகுத்தறிவோடு உடன்பட்டு இயல்போடு ஒன்றித்து இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அது அனுபவம் முயற்சி ஆகியவற்றினூடாகப் பெறப்பட்டு பயிற்சி கடைப்பிடித்தல் என்பன மூலம் ஒழுக்கமாக மாறுகிறது.'

இதனால்தான் பயிற்றுவிப்போரின் விருப்பப்படி குழந்தையை உருவாக்குவது இலகுவாக மாறுகின்றது. அவர்கள் குழந்தையின் உள்ளத்தில் தாம் விரும்பிய எதனையும் பதியச்செய்யலாம் எனவே சரியான ஒழுக்கமுறையில் ஒரு குழந்தையை பயிற்றுவிக்கத்தவறினால் எதிர்விளைவு பாரியதாகவே இருக்கும் என்பதனை யாரும் மறுக்க முடியாது. இதனை இமாம் கஸ்ஸாலி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'ஒரு குழந்தை அதன் வளர்ச்சியின் ஆரம்பகட்டத்தில் கவனிப்பாரற்று விடப்படுமாயின் மோசமான பண்புகள் கொண்டவனாகவே உருவாகுவான். அதாவது பொய்யனாக, பொறாமைக்காரனாக, கள்வனாக கோள் மூட்டுபவனாக, பிடிவாதக்காரனாக, தேவையில்லாதவற்றில் தலையிடுபவனாக, மோசடிக்காரனாக, நாணமில்லாதவனாக உருவாகுகிறான். குழந்தைக்கு நல்லொழுக்கம் கற்பிப்பதே இத்தீய பண்புகளிலிருந்து பாதுகாப்பதற்கான ஒரே வழியாகும்.'

குழந்தைக்கு உயர்ந்த ஒழுக்கத்தை கற்பிக்க வேண்டுமாயின் பயிற்றுவிப்போரும் நற்பண்புடையவர்களாக இருக்க வேண்டும். பயிற்றுவிப்போரின் சொல்லிலும் செயலிலும் உண்மை இருக்க வேண்டும்.

உதாரணமாக பொய் கூறுவதன் பாரதூரத்தை பின்வரும் சம்பவம் எமக்கு உணர்த்துகிறது.

'அப்துல்லாஹ் பின் ஆமிர் (றழி) அறிவிப்பதாவது : ஒரு நாள் என்னை எனது தாயார் அழைத்தார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டில் அமர்ந்திருந்தார் 'மகனே இங்கே வா உனக்கிதைத்ருகிறேன் என்று தாய் கூறினாள். அதற்கு இறைத்தூதர் (ஸல்): நீ என்ன கொடுக்க விரும்பினாய் எனக்கேட்க 'பேரீத்தம்பழமொன்றைக் கொடுக்க விரும்பினேன்.' என்றாள். அதைக்கேட்ட இறைத்தூதர் (ஸல்) நீ குழந்தைக்கு எதையும் கொடுக்க வில்லையாயின் உன்மீது ஒரு பொய் பதிவு செய்யப்படும்.' என்று கூறினார்.

இவ்வாறு வாய்மை நிறைந்த வழிகாட்டலாக இருப்பின் குழந்தையிடம் பொய் கூறும் பழக்கம் வரவே மாட்டாது ஒரு குழந்தை பொய் கூற ஆரம்பித்தால் அவ்வாறு பொய் கூறுவதற்கான காரணங்களைக்கண்டறிய வேண்டும். பெற்றோரைப்பின்பற்றியும் குழந்தை பொய் சொல்லக்கூடும். அல்லது பெற்றோரின் கடுமையான தண்டனைக்குப்பயந்தும் பொய் கூற முற்படலாம். சிலவேளை ஒருவரைப் பழிவாங்கும் நோக்கத்தோடு அல்லது அவரைத்தப்பவைக்கும் எண்ணத்தோடும் குழந்தை பொய் கூற முடியும். சிலபோது குறிப்பிட்ட குழந்தையின் நோக்கம் நிறைவேற வேண்டுமென்பதற்காய் அதாவது பணம், இனிப்புப்பண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக அது பொய் சொல்ல முடியும் அல்லது தனக்குரித்தில்லாத விடயங்களில் வாதாடிய நிலையிலும் குழந்தை பொய் சொல்லக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பொய் சொல்ல முற்படுவது தாழ்வுமனப்பான்மையின் வெளிப்பாடாகும். பிறருக்கு முன்னால் தனது சுயரூபம் வெளிப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக குழந்தை பொய் சொல்கிறது. குழந்தை கற்பனை வளம் நிறைந்தது இதுவரை கண்டோ, கேட்டோ பழக்கமில்லாதவிடயங்களைக் கூட கூறும் ஆற்றல் அதற்கு இருக்கிறது.

இவை யாவும் ஒரு குழந்தை பொய் சொல்வதற்கான காரணங்களாகக் கருத முடியும். எனவே உரிய காரணத்தை கண்டறிந்த பிறகு அதற்கு பரிகாரம் காணவேண்டியது அவசியமாகும். குழந்தையின் உடல், உளவியல் தேவைகளை நிறைவேற்றிக்கொடுப்பதும் குழந்தையை ஆதரிக்கும் போதும் தண்டிக்கும் போதும் நல்ல முறையில் நடந்துகொள்வதும் உயர் பண்பாடுகளையும் ஒழுக்கங்களையும் போதிப்பதும், உள்ளதைக்கொண்டு திருப்தியடைவதும், நல்ல நண்பர்களோடு பழக விடுவதும் குழந்தை பொய் பேசுவதைத் தடுக்கும் சில தீர்வுகளாகும். உயர் ஒழுக்கங்களை வழியுறுத்தும் கதைகளையும், நற்பண்புகளிற்கு மக்களிடம் இருக்கும் மதிப்பையும் எடுத்துக் கூறி பொய் பேசும் பழக்கத்தை ஒழிக்க முடியும்

ஒவ்வொரு கெட்ட பழக்கவழக்கங்களின் போதும் குழந்தையை அதற்குஇட்டுச்சென்ற காரணங்களைக் கண்டறிய நாம் முயல வேண்டும். பிஞ்சு உள்ளங்களில் அது வேர் பிடித்துவிடுவதற்கு முன்னர் பொருத்தமான வழிமுறையைக்கையாண்டு அதனை நீக்க முயல வேண்டும். நற்பண்புகளின் பால் குழந்தையைத் தூண்டி தீயபண்புகளைவிட்டுவிடுமாறும் கூறலாம். இதற்கெல்லாம் குழந்தைவிரும்பக்கூடிய வழிமுறைகளைக்கையாள்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ தாயின் வயிற்றிலிருந்து இந்தப் பூமிக்கு வரும் குழந்தை இறைவனின் ஆன்மாவைச் சுமந்துகொண்டு வருகின்றது. இதனை அழகிய முறையில் வரவேற்பதே இஸ்லாமியப் பண்பாடாகும்.

❍ குழந்தை அல்லாஹ்வைப் பற்றிக் கேட்கும்போது பெற்றோரோ ஆசிரியரோ அச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றனர். அதாவது குழந்தைக்கு அதன் இறைவனை அறிமுகப்படுத்தி அவன் மீது நம்பிக்கையையும் அன்பையும் ஏற்படுத்த வேண்டியது பயிற்றுவிப்போரின் பொறுப்பாகும்.

❍ பொதுவாக மனித உள்ளத்தில் அல்குர்ஆனுக்கு ஆழ்ந்த தாக்கமுண்டு. உள்ளத்தின் தூய்மைக்கேற்ப அது தாக்கம் விளைவிக்கும் வீதமும் அதிகரிக்கும். குழந்தையின் உள்ளம் பெரியோரின் உள்ளங்களைவிடத் தூய்மையானது. அது கள்ளமோ கபடமோ இல்லாதது. மாசு மறுவற்றது.

❍ இறை தூதரின் சொல், செயல் என்பன குழந்தையின் எப்பருவத்தில் எந்த வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்றுக் கொள்ளும் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இதை அறியும் போதுதான் குழந்தைகளின் உள்ளங்களில் இறைதூதர் மீது அன்பையும் நம்பிக்கையையும் வளர்ப்பது பெரியளவில் சாத்தியமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org